# சித்த மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்




கலாநிதி பொன்.இராமநாதன்.

Dr. P. Ramanathan
D.A.M.S.(Cey.), M.D.(India), Ph.D.(S.L.)
Paramu Siddha Medical Centre
Thavady Suthumalai Road, Thavady, Kokuvil.

# சித்த மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ மாணவருக்கான

துணைப்பாடநூல்

கலாநிதிப்பட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின்

ஒரு பகுதியாகும்.

**கலாநிதி பொன் இராமநாதன் M.D,Ph.D**

சிரேஷ்ட விரிவுரையாளர்

சித்தமருத்துவத்துறை

யாழ். பல்கலைக்கழகம்

கைதடி.

நூற்பெயர்: சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆசிரியர்: கலாநிதி பொன் இராமநாதன் M.D,Ph.D

பதிப்பு: முதலாம் பதிப்பு, ஒக்டோபர் 2008

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

அச்சகம் : ஸ்ரீ சாயி ஒவ்செற் பிறிண்டேர்ஸ், கோண்டாவில்
யாழ்ப்பாணம்
ஸ்ரீலங்கா.

நூல் கிடைக்கும் இடம் : நூலாசிரியர்
"கனகதாரா" தாவடிச் சந்தி,
கொக்குவில்
யாழ்ப்பாணம்
ஸ்ரீலங்கா.

விலை ரூபா: 200/=



தோற்றம்: 11.09.1888 மறைவு: 14.12.1955

சிந்துவெளி எழுத்துக்களைத் தக்க சான்றுகளோடு தொண்மைத் தமிழாகிய பழம் திராவிடத்திற்கு உரியன என்று முதன்முதல் அறிவித்த

**அறிஞர் பெருந்தகை**

**ஹென்றி ஹீராசு பாதிரியார் அவர்கள்**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழா பேருரையில் பேராசிரியர் க. அன்பழகன் பேசுகையில் ஹீராசு பாதிரியார் பல்கலைக்கழகம் வந்தபொழுது **தான் ஒரு ஸ்பானிஷ்ய திராவிடன்** என்று குறிப்பிட்டிருப்பதும் இங்கு நினைவு கூரவேண்டியது மிகப்பொருத்தமான விடயமாகும்.

# அன்புக் காணிக்கை

எனது இந்நூல் ஆய்வுப்பணிக்கு ஆதாரமாக இருந்து என்னை வழிநடத்திய முன்நாள் பேராசிரியரும் இருமுறை முனைவர் பட்டம் பெற்றவரும், சித்தர்கள் பற்றி அனேக நூல்கள் எழுதியவரும் ஒரு சிறந்த சித்தமருத்துவருமான என் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய **பேராசிரியர் முனைவர் இரா. மாணிக்கவாசகம் ஐயா** அவர்களின் பாதங்கட்கு இந்நூலை வணக்கத்துடன் காணிக்கையாக்குகின்றேன்.

මගේ අංකය
எமது இல.
*My Number*

ඔබේ අංකය
உமது இல.
*Your Number*

දුරකථනය යාපනය
தொலைபேசி: யாழ்ப்பாணம்
*Telephone : Jaffna* 2483 2006

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

තැ.පෙ. අංකය 57,
තිරුනෙල්වේලි
යාපනය.

த.பெ. எண் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

*P.O. Box 57,*
*Thirunelvely*
*Jaffna.*

**துணைவேந்தர் வாழ்த்து**

தமிழ் மருத்துவ அறிவியலான சித்தமருத்துவத்தின் வரலாற்றினைப் பதிவாக்கும் காலக்கடமையில் எங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இராமநாதன் அவர்களின் **சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்** நூலின் வரவுகண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இயற்கையோடு இயைந்த வாழ்வியலின் சாரமாக எங்களுக்கு வாய்த்த சித்தமருத்துவத்தினை, மருத்துவ அறிவியலாக கட்டமைத்தலில் தமிழர் பண்பாடு கண்ட அறிவியலாளர்களான சித்தர்களின் ஞானம் பெருந்துணையானது. சித்தர்களின் ஞானக் களஞ்சியமாய் பல மருத்துவ நூல்கள் தமிழுக்காயின. தமிழகம் தொடங்கி ஈழம் வரையான தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் சித்த மருத்துவ ஞானம் ஆழவேர்விட்டது. கால வெளியில் நிகழ்ந்த பண்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிடை ஏனைய மருத்துவ மரபுகளோடு இசைந்தும் தனித்தும் அதன் நிலைபேறு உறுதி செய்யப்பட்டது.

இத்தகைய பாரம்பரிய அறிவுத்திரட்சியினை மேம்படுத்தும் இன்றைய பண்பாட்டு விழிப்புணர்வுக்கு வரலாற்று அறிவு மிகவும் இன்றியமையாதது. இந்த பெறுமதியான வரலாற்றை தெளிந்த வரலாற்று ஆதாரங்களுடன் இந்நூல் பதிவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண சித்த மருத்துவ பாரம்பரியத்தில் முகிழ்ந்து, அதனை வரன்முறையாக பயின்று சித்தமருத்துவதுறையில் பட்டம் பெற்ற இராமநாதன் அவர்கள், தமிழகத்தின் புகழ்பூத்த பாளையம்கோட்டை மருத்துவக் கல்லூரியின் உயர்பட்ட ஆய்வு மாணவராகி கலாநிதிப்பட்டம் பெற்றவர். எங்கள் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவ துறையின் மதிப்பார்ந்த விரிவுரையாளராக கணிக்கப்பெறும் கலாநிதி இராமநாதன் அவர்கள், மென்மேலும் பல அறிவுக்கனிகளை எங்கள் சமூகத்திற்காக்க என் அன்பான வாழ்த்துக்கள்

NShan

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
துணைவேந்தர்
யழ் பல்கலைக்கழகம்
02.10.2008

## நூலாசிரியரின் உள்ளத்திலிருந்து.........

சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி அறிவதற்கு முன் உலகிலுள்ள மருத்துவ வளர்ச்சி பற்றியும், உலகில் வேறுபட்ட மனிதகுல நாகரிகங்கள் அனைத்தையும் அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும். சித்தமருத்துவம் தமிழர் மருத்துவம் எனின் தமிழர்களின் பூர்வீகத்தை அறிவதற்கு சிந்துவெளி நாகரிகத்தை தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் உண்டு. அத்துடன் உலகிலுள்ள மற்றைய நாகரிகங்களை ஓரளவு தெரிந்துகொள்வதன் வாயிலாக மருத்துவக்கலை வரலாற்றினை தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

இவற்றில் மிகவும் புராதன காலமான குமரிக்கண்டம் பற்றியும் அதில் ஏற்பட்ட வரலாற்று மாற்றங்கள் பற்றியும் இங்கு விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. குமரிக்கண்டம் பற்றிய ஆய்வியல் கோட்பாடுகளில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இன்றும் காணப்படுகின்றன. அவை முடிவுறாத தர்க்கவாதங்களாக நீண்டுகொண்டே செல்கின்றன. எனினும் இதுவரை கிடைத்த ஆய்வுத்தகவல்களிலிருந்து பெற்றுக்கொண்ட முடிவுகளையே எனது கருத்தாக - ஆய்வாக இந்நூலில் முன்வைத்துள்ளேன். இவை பற்றிய தகவல்களை அறிந்தவர்கள் மேலும் என்னுடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தந்தால் பேருதவியாக இருக்கும்.

திராவிட மருத்துவத்திலிருந்து உருவானதே சித்த, ஆயுள்வேத மருத்துவம் ஆகும் என்ற கருத்தும் இங்கு ஆழமாக சிந்திக்கப்பெற்றுள்ளது. சித்தர்கள் காலத்தில் சித்தமருத்துவம் உச்சநிலையில் இருந்தது என்பதற்கு பல ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுதேச மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு தங்களுடைய மருத்துவமுறை பற்றிய தெளிவான அறிவு பெற்றிருக்கவேண்டியது அவசியமாகும். புத்திஜீவிகள் மத்தியில் கூட சித்தமருத்துவத்திற்கும் ஆயுள்வேத மருத்துவத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்

தெரியாமல் இரண்டினையும் ஒன்று எனக்கூறுவதையும் அவதானிக்கலாம்.

இங்கு தமிழ் மருத்துவக்கலை வரலாறு பற்றி விபரிக்கையில் அவை நான்கு படிகளாக வகுத்துக் கூறப்பட்டுள்ளன. சித்தமருத்துவத்திற்கும் ஆயுள்வேத மருத்துவத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைகள் வேற்றுமைகள் அலசி ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் திராவிடம், ஆரியர் என்ற பதங்களையும் மொழி அடிப்படையிலும், இன அடிப்படையிலும் ஆராயப்பட்டுள்ளன. ஈழத்து சித்தமருத்துவ வரலாறு பற்றியும் இங்கு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றிலிருந்து சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய தெளிவான ஓர் வரலாற்றை சகலரும் அறிந்துகொள்ளமுடியும். இது சுதேச மருத்துவ மாணவர்களுக்கு தெளிவான அறிவைப் புகட்டவல்ல அத்திவாரமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

மேற்குறிப்பிட்ட விடயம் எனது கலாநிதிப் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் ஒரு பகுதியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும் விபரம் அறியவேண்டியிருப்பின் மேற்குறிப்பிட்ட ஆய்வேட்டை பல்கலைக்கழக நூலகத்தில் பெற்று அறிந்துகொள்ளலாம்.

இந்நூலின் அட்டைப்படம் ஏனைய படங்கள் யாவும் குறிப்பாக திரு.கா.அப்பாத்துரை, டாக்டர். க.ப.அறவாணன், டாக்டர். க.த.திருநாவுக்கரசு போன்ற அறிஞர்களின் சிந்தனைகளை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டவையாகும். இத்தகைய பேரறிஞர்கள் யாவருக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் இந்நூலாக்கப்பணியில் எனக்கு உதவிய பேராசிரியர் (திருமதி)கலைவாணி இராமநாதன் அவர்கட்கும் இந்நூலைத் திருத்தமாக அச்சில் பதிப்பித்து வெளியிடுவதற்கு உதவியாக இருந்த சாயி ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றிகள். என்னை இப்பணியினை நிறைவுசெய்யும் வண்ணம் திருவருள் புரியும் இறைவனின் பெரும் கருணையினையும் இவ்விடத்தில் மனதிலிருத்தி வணக்கம் செலுத்தி அமைகிறேன்.

**கலாநிதி பொன். இராமநாதன்**

# விசேட நன்றிகள்

சித்தமருத்துவத்துறையில் இருபத்தியிரண்டாம் அணி மாணவர்களால் 07.10.2008 அன்று நடைபெற்ற "சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" எனும் கருத்தரங்கில் இந்நூலினை வெளியிட்டு வைத்த யாழ் பல்கலைக்கழக அன்புக்குரிய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களுக்கும், பல்வேறு வேலைப்பளுவிற்கு மத்தியிலும் பெருந்தன்மையுடன் வாழ்த்துரை தந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களுக்கும் விசேட நன்றிகள் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கலாநிதி பொன். இராமநாதன்

Dr.P.Ramanathan
D.A.M.S.(Cey.).M.D.(India).Ph.D.(S.L)
Paramu Siddha Medical Centre
Thavady Suthumalai Road, Thavady, Kokuvil.

## அகத்தியர் வணக்கம்

தென் பொதிகைத் தமிழ்க்கோமானே
தமிழ்க்கடவுள் வழி வந்தோனே
கும்பத்தில் புறப்பட்ட குறுமுனியே
கடலைக் குடித்து வற்றச்செய்தோனே
அகத்தியம் தந்த ஆதி முனிவனே
ஆதி அந்தமில்லா காலத்தோனே
சங்கத் தமிழ் நூல் தந்தவனே
சித்தியினால் மருத்துவம் செய்தோனே
வைத்திய காவியம் தந்த ரத்தினச்சுருக்கமே
உனை வணங்குகின்றோம் போற்றி!

## அகத்தியர் ஞானம் 2

மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை யுயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்தவேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே.

# பொருளடக்கம்


1 ஆதி மனிதனின் மருத்துவ அறிவு 01

2 உலகில் வேறுபட்ட மனித குல நாகரிகங்கள் 05

3 குமரிக்கண்டம் 06

3.1 குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்
3.2 குமரிப்பூண்டு

4 சிந்துவெளி நாகரிகம் 16

4.1 மருத்துவக்கலை

5 திராவிடர், ஆரியர் எனும் சொற்பதங்கள் 21

5.1 திராவிடர்
5.2 ஆரியர்
5.3 திராவிடரும் ஆரியரும் (*இனஅடிப்படையில்*)

6. தமிழ் மருத்துவக்கலை வரலாறும் சித்த ஆயுள் வேத மருத்துவ முறைகளின் வளர்ச்சியும் 34

6.1 உலகில் மருத்துவ வளர்ச்சி (*இதில் ஐந்து உபபிரிவுகள் உண்டு*)

6.2 தமிழ் மருத்துவக்கலை வரலாறு 35

6.2.1 இயற்கை நெறிக்காலம் (*சங்க காலம்*)

6.2.2 அறநூற்காலம் (*சங்கமருவிய காலம்*)

6.2.3. சித்தர் காலம்

6.2.4 அ) தமிழ் மருத்துவம் நலிவுற்ற காலம் (*19ம் நூற்றாண்டு*)

ஆ) தற்காலம் - அறிவியற் காலம் (*20ம் நூற்றாண்டு*)

6.3 சித்த ஆயுள்வேத மருத்துவ முறைகளின் வளர்ச்சி

6.4 ஆயுள்வேத மருத்துவத்துக்கும் வேதங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பு

6.5 சித்த ஆயுள்வேத வேறுபாடுகளில் சில

7. ஈழத்தில் சித்த மருத்துவ வளர்ச்சி 63

## ஆதிமனிதனின் மருத்துவ அறிவு.

மனிதன் தோன்றிய காலம் தொட்டே மருத்துவம் தோன்றிவிட்டது எனலாம். ஆதி மனிதன் தன்னைச்சுற்றியுள்ள தாவரங்களையே உணவாகப் பயன்படுத்தினான். அவனுக்குத் தாவரங்களைச் சமைக்கவோ பதப்படுத்தவோ முதலில் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. காலப்போக்கில் நாகரிகம் வளர்ச்சி பெற ஆரம்பித்ததன் பின்னரே அவ்வறிவைப் பெற்றிருப்பான் என எண்ணுவதில் தவறில்லை. பின்பு உடை மற்றும் இருப்பிடங்களுக்கும் தாவரங்களை பயன்படுத்தத் தொடங்கியிருக்க வேண்டும்.

தாவரங்களின் இலை, பூ, காய், கனி, வித்து, கிழங்குகளை உணவாகப் பயன்படுத்தியது போலவே அவற்றை மருந்தாகப்பயன்படுத்தி நலமடையக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். இவ் வகையில் அவற்றினை உணவுக்காகப் பயன்படுத்தி வரும் போது அவை தனது உடலுக்குச் சுகத்தையும் பலத்தையும் கொடுக்கக்கூடியன என்பதையும் நாளாந்த அனுபவத்தின் மூலம் மனிதன் அறியத் தொடங்கினான். இத்தகைய முறையில் தாவரங்களின் மருத்துவப் பயன்களையும் அனுபவரீதியாக அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனவே மனிதனைப் பீடித்த நோய்களிலிருந்து விடுபடவும், நோய் வராமல் தடுக்கவும் மூலிகைகளைப் பயன்படுத்தத் தொடங்கினான். இவற்றின் ஓர் அங்கமாக கைப்புச் சுவையுள்ள பொருட்கள் புழுக்கொல்லியாகவும், துவர்ப்புச் சுவையுடையவை குமட்டலடக்கியாகவும் செயற்படுவது மனிதனுக்குத் தெளிவாயிற்று. இந்த முறை மூலம் பட்டறிவினாலே கண்டறிந்த தாவரங்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவத்துக்குப் மாந்தர் பயன்படுத்தினர்.

ஆனால் மனிதன் விலங்கு மருந்துகளையோ (கோரோசனை, கஸ்த்தூரி) கனிம மருந்துகளையோ (இரும்பு, செம்பு, தங்கம்) நோய், நீக்கத்துக்கு முதலிலே பயன்படுத்தியிருக்க முடியாது. ஏனெனில் தாவரங்கள் எங்கும் வளர்பவை, எளிதில் கிடைப்பவை,

சேகரிப்பதற்கு உகந்தவை, மனிதனுக்குத் தீங்கு விளைவிக்காதவை அத்துடன் பெற்றுக் கொள்வதில் மனத்தில் அச்சம் ஊட்டாதவை. மாறாக விலங்கு மருந்துகளோ பெரும் ஆபத்துக்களுக்கிடையில் வேட்டையாடியே பெற வேண்டும். விலங்குகள் இடம் பெயர்ந்து கொண்டு இருப்பதாலும் அவற்றினை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாது. இதே போல் கனிம மருந்துகளை அகழ்ந்தெடுத்துப் பெற வேண்டியிருப்பதாலும் முறையாகச் சுத்தம் செய்த பின்னரே பயன்படுத்த வேண்டியிருப்பதாலும் முதலில் இதனை மருந்தாகக் கருதியிருக்க வாய்ப்பில்லை.

மருத்துவ வளர்ச்சிக்கு விலங்குகளும் ஓரளவு உதவியாக இருந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக நாய், பூனை போன்ற சில பிராணிகள் அறுகு, குப்பைமேனி போன்ற தாவரங்களை உண்பதைக் காண்கிறோம். ஆனால் அப்பிராணிகள் அவற்றை அன்றாட உணவில் சேர்ப்பதில்லை. அவற்றை உண்பதன் மூலம் அப் பிராணிகள் தங்கள் உடலில் உள்ள நஞ்சினை நீக்கிச் செரிமானத்திறனைப் பெருக்கிக் கொள்கின்றன. மேற்கூறிய தாவரங்களை உண்ண வேண்டுமென்று எவரும் அப் பிராணிகளுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. பிராணிகளும் இத்தகைய முறையில் அறியக்கூடிய உள்ளுணர்வைக் காலப்போக்கில் அறிந்திருக்க வேண்டும்.

கீரியும் பாம்பும் சண்டையிட்டுப் பாம்பினைக் கீரி தனது பற்களால் வெட்டித் துண்டாடிய பின்பு, ஓடிச் சென்று அறுகம் புல்லைமென்று அதன் மேல் புரளுவதைக் கவனித்த மனிதன் அறுகில் நஞ்சு போக்கிச் (விடமுறிவு-Antidote) செய்கை உண்டென்பதை அறிந்திருக்க வேண்டும்.

“அதர்வ வேதத்தில் பறவைகளும், பாம்புகளும், கீரிகளும், பன்றிகளும் தம் மூலிகை அனுபவங்களை மனிதனுக்குப் புகட்டுவதாகப் பல சுலோகங்கள் உண்டு” எனத் தாவரவியற் பேராசிரியர் இரா. குமாரசுவாமி குறிப்பிடுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட உள்ளுணர்வு ஆறறிவுடைய மனிதனுக்கும் உண்டு. இதன் இயற்கையான உணர்வென்றோ, இறை சக்தி என்றோ கூறலாம். எடுத்துக் காட்டாக ஒருவனுக்கு நோய் ஏற்படும் போது அந்த நோயை நீக்கக்கூடிய சுவையுள்ளவற்றையே விரும்புவான். இயற்கையாக நீர்க்கோப்பு உள்ள ஒருவன் (Common cold) எதிர் குணமான சூட்டினை விரும்புவது வழக்கம்.

மேற்கத்திய மருத்துவ முறைகளிலும் "இயற்கையான பாதுகாப்பு சக்தி" என இதனைக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக ஒரு மனிதனுக்கு மூளைக்குச் செல்கின்ற இரத்தம் சோர்வடையும் போது, அவனுக்கு மூளைக்குப் பிராணவாயு போதாமையால் (Anoxia) மயக்கம் ஏற்பட்டு கீழே விழுகின்றான். கீழே விழுந்தவுடன் உடம்பு தரைக்குச் சமாந்தரமாக வந்தவுடன் இருதயத்திலிருந்து வெளியேறும் இரத்தம் மூளைக்கு இலகுவாகச் செல்வதால் மயக்கம் நீங்குகின்றது. இதனால் மயக்கமடைந்து கீழே விழுவது ஒரு பாதுகாப்பான இயற்கைச் சக்தியெனக் கருதுகின்றனர். இதனை இறை சக்தியெனவும் கூறலாம். இவ்விடத்தில் இறைவனால் மருத்துவம் உலகத்துக்குத் தரப்பட்டது என்ற கூற்று பொருத்தமாகின்றது. சித்த மருத்துவம் தமிழ்ப் பண்பாட்டுடன் சேர்ந்து மனிதனைச் சமயவாழ்வில் புகுத்தி நெறிப்படுத்தி வருவதனால் மேற் குறிப்பிட்டவாறு கருதியிருக்கலாம். இவ்வடிப்படையிலேயே சித்த மருத்துவம் சிவனிடமிருந்து உமைக்கும், உமையிடமிருந்து நந்திக்கும், நந்தியிடமிருந்து அகத்தியருக்கும் போதிக்கப்பட்டது. என்று கூறப்படும் கருத்து இறைசக்தியை முதன்மைப்படுத்துவதற்கான உருவக் கதையென எண்ணமுடிகின்றது.

மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட தாவரங்களை மூலிகை என அழைப்பது மரபாகவுள்ளது. "மூலிகை" என்ற சொல் ஒரு தமிழ்ச் சொல்லாகும். (மூலம் - வேர்) வேரையுடைய தாவரத்தை மூலிகை எனலாம். தாவரத்தின் முக்கிய பகுதி வேர் (மூலம்) ஆகும். தாவரம் என்ற சொல் வடமொழியில் இருந்து வந்தது. திரமானவற்றைத் தாவரம் எனக் குறிப்பிடுகின்றனர்.

தாவரம் என்ற சொல் திருவாசகத்திலும் பிங்கல நிகண்டிலும் முதன் முதல் காணப்படுவதால் கி.பி. ஏழு, எட்டாம் நூற்றாண்டளவிலேயே இச் சொல் தமிழில் வந்து வழங்கியிருக்க வேண்டுமென்பது வே.நெடுஞ்செழியனின் கருத்தாகும்.

மூலத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு மூலிகைகளின் பெயர்கள் அமைந்திருப்பதை மருத்துவ நூல்களில் காணலாம். எடுத்துக் காட்டாக **தசமூலம்**, **சிறுபஞ்சமூலம்**, **பெரும்பஞ்சமூலம்** ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதே போல் வேருடையவற்றை **கொடிவேரி**, **இருவேரி**, **சாத்தாவேரி** எனவும் அழைக்கும் வழக்கம் உண்டு. மூலிகைகளின் வேர், தண்டு, இலை, பட்டை, கட்டை, மலர், கனி, விதை என எல்லாவற்றிலுமே மருத்துவப் பயன் உண்டு. எனினும் இவை அனைத்துள்ளும் வேரிலேயே அதிகமான மருந்துச் சத்துகள் தயாரித்தும், சேமித்தும் வைக்கப்படுவதாலும், வேர் நிலத்தில் இருப்பதாலும், தாவரத்தின் அடிப்படை உறுப்பான இப்பகுதி உயிர் வாழ்க்கைக்கு முக்கிய தளமாக அமைகின்றது. எனவே மற்றைய உறுப்புக்களை விட வேரே சிறப்புவாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு மூலிகை என்ற சொல் தமிழில் வழங்கப்பட்டு வருகிறது எனக் கருதுவதில் பிழையில்லை. வட மொழியில் மூலிகையைக் குறிக்கப் பயன்படும் தாவரம் எனும் சொல் கடலினடியில் நிலத்தில் ஊன்றி நிற்கும் பவளம் போன்ற விலங்குகளையும் பல் வகைக் கனிமங்களையும் ஒருங்கே குறிப்பிடுவதால் குழப்பத்தை விளைவிக்க வாய்ப்புண்டு. இதனால் தமிழ் மரபுப் படி மரம், செடி, கொடி முதலியவற்றினைக் குறிக்கும் அறிவியலை மூலிகையியல் என்று குறிப்பிடுவது அறிவுக்கேற்ற கருத்தென பேராசிரியர் குமாரசுவாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அறிவியல் அடிப்படையில் உலகிலுள்ள செடி, கொடி மரங்களனைத்தும் மருத்துவப் பயன்பாட்டிற்குரியன என்பதனைத் திருவள்ளுவர்,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான் கண் படின்"

என்கிறார்.

இந்த வகையில் உலகில் ஏறக்குறைய 25000 மூலிகைகள் உண்டென்பது ஆய்வாளர்களான எஸ்.சோமசுந்தரம், க.வெங்கடேசன் ஆகியோரின் கருத்தாகும்.

மருத்துவ வரலாறு பற்றி நோக்கும் போது அது பரவிய நாடுகளை ஒட்டியும், அங்கு வாழ்ந்த மக்கள் இனத்தைப் பொறுத்தும், காலத்தைத் தழுவியும் மூவகையாகப் பெயர்கள் வழங்கலாயிற்று. பபிலோனிய மருத்துவம், சீன மருத்துவம், இந்திய மருத்துவம்என்பன முதலாவது பிரிவுக்கும், தமிழர் மருத்துவம் இரண்டாம் பிரிவுக்கும், வேதகால மருத்துவம் மூன்றாம் பிரிவுக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

## 2. உலகின் வேறுபட்ட மனிதகுல நாகரிகங்கள்.

மனிதகுல நாகரிகமும் வாழ்வு முறையும் நதிப்பள்ளத்தாக்குகளின் அருகே உருவாயின என்பதை அனைவரும் அறிவர். கி.மு. 3,000 ஆம் ஆண்டிலிருந்து எகிப்தில் **நைல் நதிப்** பள்ளத்தாக்கிலும், மத்திய ஆசியாவின் **யூப்பிரட்டீஸ் - தைக்கிறிஸ்**நதிப் பள்ளத்தாக்கிலும், சீனாவில் **சிக்கியாங் - குவாங்கோ**நதிப் பள்ளத்தாக்கிலும், தென் ஆசியாவிலும் **இந்து** நதிப் பள்ளத்தாக்கிலுமே முதன் முதலில் நகரங்கள் (First Cities) தோற்றுவிக்கப்பட்டிருந்தன என வரலாற்று அறிஞர் கிருஷ்ணராஜா குறிப்பிடுகின்றார்.

இவற்றில் இறுதியாகக் குறிப்பிட்ட நாகரிகமே சிந்துவெளி நாகரிகம் என்றும் இதுவே சித்த மருத்துவத்தின் முன்னோடியான திராவிட மருத்துவம் (தமிழ் மருத்துவம்) தோன்றிய இடமென்று கருத இடமுண்டு. சிந்துவெளி நாகரிகத்துக்கு முன்னர் குமரிக்கண்ட

நாகரிகம் ஒன்று இருந்ததாக அறியக்கிடக்கின்றது. அதுவும் கடல் கொண்டு அழிந்தது. இவை அனைத்துக்கும் பெரும்பாலும் இலக்கியச் சான்றுகளே உள்ளன. எனவே பழங்காலத்தில் விஞ்ஞானப் படைப்புக்களை விட இலக்கியப் படைப்புக்களே சிறந்திருந்தன என்கிறார் பேராசிரியர் இரா. குமாரசாமி. இனிக் குமரிக்கண்டம் பற்றிப் பார்ப்போம்.

## 3. குமரிக்கண்டம்.

ஐரோப்பிய நாகரிகத்தின் தொடக்கத்தினை அறிய விரும்பின், அதற்கு முதல் இந்திய வரலாற்றை அறிந்திருக்க வேண்டும் என்று புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியரான வின்ரர் நிற்ஸ் (Winter Nitz) கருதுகின்றார்.

இவரது கருத்தினை வலியுறுத்தும் வகையில் சேர்.ஜே.டபிள்யு ஹோல்ட்ர்ன்ஸ் (Sir.J.W.Holderness) தமது நூல் ஒன்றில் "இந்திய நாகரிகம் உலகில் மிகப் பழையதும் உயர்ந்ததும் ஆகும்" என்கிறார்.

பழைய தமிழகத்தைக் கோண்டுவானா (Gondwana), லெமூரியா, குமரிக்கண்டம் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது. இங்குள்ள மலை, ஆறு முதலிய அனைத்தும் மிகப் பழமையானவை, என்றும் இன்றைய இந்தியாவின் வட எல்லையாகவிருக்கும் இமயமலை தமிழகம் தோன்றிய போது இல்லை எனவும், அது புதிதாகத் தோன்றியதெனவும் வரலாற்று ஆய்வாளர் கூறுகின்றனர். அதனாலேயே அம் மலையை ஆங்கிலத்தில் "Young Fold Mountain" என்று கூறுவது வழக்கம். இதற்குத் தெற்கே ஒரு பெருந்தீவு இருந்ததாகவும் அத்தீவு தென்கடல் வரையும் பரவி இருந்ததாகவும் கூறுவர். இதனைச் சம்புத்துவிபம் என்று வடமொழியாளர் கூறுவர். சம்பு என்ற சொல் நாவல் மரத்தினைக் குறிக்கின்றது. இதற்கு இலக்கியச்சான்றாக,

"சம்புத்தீவிடை ..................................மருங்கின்"

மணிமேகலை 17-62.

"நாவல் பெருந் தீவின் வாழ்பவ"

அப்பர் தேவாரம் 11-62

முதலிய வரிகளைக் கொள்ளலாம்.

ஈழத்தில் உருவான பரராசசேகரம் என்ற வைத்திய நூலில் சம்பாதிச்சூரணம் என்ற சொல்லாட்சியை இன்றும் காணலாம். இதனிலிருந்து பண்டைய காலம் தொடக்கம் மரங்களின் பெயர்களையே நிலங்களுக்குச் சூட்டியிருந்தார்கள் என்பது புலனாகிறது. எடுத்துக் காட்டாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றையும் கொள்ளலாம். இது பற்றிய விஞ்ஞான தாவரவியல் விளக்கத்தினை அடுத்து வரும் பகுதியில் காணலாம்.

இன்னுமொரு எடுத்துக் காட்டாகச் சிங்களத் துவீப மென்னும் பெயர் இலங்கைக்கு அங்குள்ள பட்டையைக் கொண்டு ஏற்படலாயிற்று என்றும் (சிங்களம் = பட்டை) அது கறுவாப்பட்டையென்றும் லக்ஷமண வைத்தியரென்பவர் எழுதிய சமஸ்கிருத அகராதியில் காணப்படுவதாக யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் வரலாற்று நூல் கூறுகின்றது.

குமரி நாட்டில் வாழ்ந்தவர்கள் குமரர்கள் என்று சொல்லப்பட்ட சித்தர்கள் எனவும், குமரர்கள் இருந்த நாடு குமரி நாடு எனப்பட்டது எனவும் அவர்கள் வணங்கி வந்த தெய்வமும் குமரன், குமரி எனப்பட்டனர் என்றும் அங்கு வழங்கி வந்த மொழியும் குமரி மொழி (குமரி என்ற சொல்லுக்கு இளமையென்பது பொருளாகும்) எனவும், தமிழ் எனினும், குமரி எனினும் ஒக்கும் எனவும் குமரனாகிய முருகனுக்குச் சித்தன் என்ற ஒரு பெயரும் உண்டு எனவும் குறிப்பிடுகின்றார் வித்வான் வெ.சு.சுப்பிரமணிய ஆச்சாரியார். குமரிக்கண்டமே மாந்தர் முதலில் தோன்றிய இடம் என M.S.பூர்ணலிங்கம் குறிப்பிடுகின்றார். குமரிக்கண்ட நாகரிகமே உலக நாகரிகத்தின் ஆரம்பமென்பதனைப் பேராசிரியர் ஹெக்கெல்

(Prof. Heckal) உலக நாகரிகத்தின் தொட்டில் (Cradle of Man-kind) என விவரிக்கின்றார். மேலும் இது பற்றிக் கூறுகையில் பூமியின் மத்திய ரேகை (Equator) க்கு இரு புறமாகவும் இந்துமாக்கடலில் மூழ்கிப் போயிருக்கும் கண்டமே பண்டைய தமிழகம் என்றும் அங்கு தான் மனிதன் தோன்றிய வரலாறு (Pedi-gree of man) உண்டு என்றும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

புகழ் பெற்ற வரலாற்று ஆசியராகிய எச்.ஜி.வேல்ஸ் (H.G.Wells) என்பவர் தமது நூல் ஒன்றில் இரண்டு வரைபடங்களைத் தந்துள்ளார். அவை முறையே 50000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஐரோப்பா, மேற்கு ஆசியா முதலியவற்றைக் காட்டுவன. இப் படத்தின் மேற்குப் புறத்தில் அரபிக் கடலையும், கிழக்குப் புறத்தில் வங்கக் கடலையும் காணலாம். இரண்டாவது வரைபடத்தில் சுமார் 35000 ஆண்டுகளுக்கும், 25000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் உத்தேசமான ஐரோப்பா, மேற்கு ஆசியா, பஞ்சாப், இமயமலை ஆகியவட பகுதிகளைத் தென் இந்தியாவினின்று கிழக்குக் கடல் பிரிப்பதையும் காணலாம்.

இந்த இரு வரைபடங்கள் குறிக்கும் இந்தியாவின் மிகப் பழைய வரலாற்றுச் சான்றுக்கு ஆதாரமாக இருக்கு வேதத்தில் கூறப்பட்ட நீர், நில அமைப்பு ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கடல் நூல் (Oceanography) என்னும் தற்காலக் கலையறிவால் ஒரு காலத்தில் தென் அமெரிக்காவினின்று ஆபிரிக்காவை ஒட்டியும் இந்தியாவையொட்டியும், அவுஸ்திரேலியா வரை படர்ந்தும் இருந்த பகுதி கோட்டுவானா எனப்பட்ட ஒரு கண்டம் கடலில் மூழ்கியது எனும் வியக்கத்தக்க உண்மையை அண்மையில் கண்டுபிடித்திருக்கின்றனர்.

## 3.1 குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட மாற்றம்.

கோள்கள் சூரியனைச் சுற்றிக் கொண்டிருப்பதை அனைவரும் அறிவர். அதனில் ஒரு கோளின் சுழற்சியில் ஏற்பட்ட தடுமாற்றத்தால் ஒரு துண்டு விடுபட்டு விலகியதும் அது பூமியின் ஈர்ப்புச் சக்தியால் இழுபட்டு வந்து பூமியை அடைந்து லெமூரியாக் கண்டத்தை மறைத்து சிந்து கங்கைச் சமவெளி, இமயமலை, மத்திய ஆசியா முதலிய நிலப்பரப்புகளை வெளியே கொண்டு வந்திருக்க வேண்டுமென்பதும் இதனை அவுஸ்திரேலியாக் கண்டத்தின் தோற்றம் பற்றிய கருத்தும் உறுதி செய்வதாக தமிழக ஆய்வாளர் சிலர் கருதுவர். இதிலிருந்து விண்மீன் பூமியில் வீழ்ந்ததால் ஏற்பட்ட நிலப்பகுதி பின்னர் அவுஸ்திரேலியா என வழங்கப்பெற்று வருகிறது என அறிய முடிகிறது. இப் பகுதியை ஆராய்ந்து அறிந்த நிலவியலாளர் கூறும் உண்மைகளும், வான இயலாளர் கண்டறிந்த விளக்கங்களும் ஒத்துள்ளமை கவனிக்கத் தக்கது என்றும் ந.சி.கந்தையாபிள்ளை கூறுகின்றார். இப்பகுதி பல வகையிலும் விந்தையான நாடாகும். இங்குள்ள மரம், செடி, கொடி முதலியன இயற்கையாய் வேறு எந்த நாட்டிலும் வளர்வதில்லை. அவ்வாறே யாழ்ப்பறவை, துறக்கப்பறவை முதலிய பறவையினங்களும், கங்காரு முதலிய விலங்குகளும் வேறு எங்கும் காணமுடியாததெனலாம். இதை நோக்கும் போது அவுஸ்திரேலியா உலகோடு சார்பு பெற்றிராத ஒரு தனித் துண்டமோ என்று நினைக்கவும் இடமுண்டு. அதாவது இது உலகில் ஈர்ப்பு வன்மைக்குட்பட்ட காரணத்தால் உலகின் மீது விழுந்த விண்மீனின் சிதைந்த பகுதி எனப்படுகிறது. இதனால் செங்குத்தாய் இதுவரை சுற்றிக் கொண்டிருந்த உலகம் இருபத்தாறு பாகை சரிந்து ஓடிய பின், அத்தாக்கு வன்மை குறையக் குறைய சரிவும் குறைந்து இன்று இருபத்துமூன்றரை பாகையளவு சரிவில் ஓடுகின்றது. அதனாலேயே இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் சென்ற பின் இப்படி ஏற்பட்ட சரிவும் நீங்கிவிடுமென்று அறிவியலறிஞர்கள் கருதுகின்றனர். விண்மீன் விழுந்ததன் விளைவாகக் குமரிக்கண்டம் அழிவுற்றது. அத்துடன் வடக்கே இருக்கும் இப்போதைய இராஜபுதானத்தின் பெரும் பகுதி தெற்கிலும் கிழக்கிலும் அராவாவி மலை வரை கடலால் மூடப்பட்டிருந்தது என்றும் நிலநூலார் இக்கடலுக்கு இராஜபுதானக் கடலென்றும் பெயரிட்டுள்ளனர் என்றும், இப்பகுதியே இப்போது காணப்படும் அடிப்படையாகக் கொண்டு லெமூரியா என்று பெயர் இட்டனர்.பெரிய இந்தியப் பாலை நிலமென்றும் கூறுவர்.

குமரிக்கண்டத்தை லெமூரியா என்று வேறு பெயர் கொண்டும் அழைப்பதுண்டு. இது பற்றிக் குறிப்பிடுகின்ற ஆங்கிலேய அறிஞர் சிலெட்டர் (Selator) என்பவர் கிழக்கே பர்மா தொடங்கி, சீனா வரையிலும், மேற்கே ஆபிரிக்காவின் கிழக்கு தெற்குக் கரையிலிருந்து வடக்கே விந்திய மலை வரையும் விரிந்திருந்த கடல் கொண்ட பகுதிக்கு லெமூரிய என்று பெயரிட்டுக் குறிக்கின்றார்.

குரங்கு இனத்தைச் சேர்ந்த லெமுர் என்ற விலங்கு வாழ்ந்த இடம் இது என்றும் அதனால் இப்பகுதிக்கு இப் பெயர் ஏற்பட்டதாகக் குறித்துள்ளனர் என்றும் இந்தக் குரங்கிலிருந்து தோன்றிய வளர்ச்சியே மனித நிலையென்றும் பேராசிரியர் இரா. மாணிக்கவாசகம் அவர்களின் "அகத்தியர் வரலாறு" என்னும் ஆய்வேடு மேலும் கூறுகின்றது.

புவிச்சரிதவியல் (Geology), கூர்ப்புக் கொள்கை (Evolution) ஆகியவற்றின் படி உயிரினம் படிப் படியாக அதாவது புழு, பூச்சிகளும், பின்னர் முதுகெலும்புடையவை, பறவைகள், குட்டியிடுபவை, இருகாலுயிர்கள் என்பவைகளும் தோன்றின. ஆனால் இரு கால் உயிர்களுக்கும் மனிதனுக்கும் வேற்றுமை அதிகம் இருப்பதால் அவற்றுக்கிடைப்பட்ட இனம் ஒன்று இருக்க வேண்டும் என்று அறிவியல் அறிஞர்கள் சிந்தித்தார்கள். அதன்படி தேடியதில் கிட்டத்தட்ட மனிதருடைய அமைப்பும் மூளை உருவும் உடைய லெமூர் என்ற உயிர் வகை ஒன்று மத்திய கோட்டைச் சுற்றி இருப்பதைக் கூர்ந்து நோக்கி அந்த லெமூர்களிலிருந்து மனித இனம் உருவாகியிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

ஆயினும் தனித்தனியே சிதறிக் கிடக்கும் மத்திய கோட்டுப் பிரதேசக் காடுகளில் தனித்தனியே மனித இனம் ஏற்பட்டிருக்க முடியாதெனவும், அவை அனைத்துக்கும் பொதுவான ஓர் இடத்தில் அத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டுமென முடிவு செய்தனர். அப்போது ஓர் இடத்துக்கு லெமூர் என்ற அவ்வுயிர் பெயரையே

லெமூரியா என்பது ஓர் இலத்தீன் சொல் என்றும் அதன் பொருள் அமிழ்ந்து போன நாடு (Submerged land) என்பதுமாகும்.

உயிர்த்தோற்றம், மனிதனின் தோற்றம் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் செடி கொடி வகைகள் உயிர்கள் இவற்றின் செழித்த வளர்ச்சியும் பெருக்கமும் பூமியின் மத்திய கோட்டுப் பகுதியிலேயே தலைசிறந்து விளங்கின எனக் கருதலாம். இவ்விதம் மத்திய கோட்டுப் பகுதிக்கு அண்மையிலோ மத்திய கோட்டிலோ இருக்கும் இக்கால நிலப்பகுதிகளாகிய ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற கிழக்கிந்தியத் தீவுகள், தென்அமெரிக்கா என்பவையே இந்த நிலப்பரப்புக்கள் ஆகும். இங்கும் செடி கொடி முதலியன செறிந்து விளங்குகின்றன. இந்தக் காடுகள் இடையே உள்ள தாவரங்கள், உயிர் வாழ்வன என்பவற்றுக்கிடையே பெரிதும் ஒற்றுமை காணப்படுவதாகவும் ஆய்வாளர் கருதுவர். இக்கருத்தினை மொழிஞாயிறு என்று போற்றப்பெறும் தேவநேயப்பாவணரும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்கின்றார்.

குமரிக்கண்டத்தின் வரலாறு பற்றி ஆய்வாளர் இடையே பல்வேறு ஐதீகங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவற்றிலே ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது. தமிழ் வேந்தனுக்கு இளை என்னும் பெண் மகளும், இயமன் என்ற ஆண் மகனும் இருந்தனர். மனு தான் ஆண்டு வந்த நாட்டின் தென் பகுதியை இயமன் என்ற மகனுக்கும், வட பகுதியை இளை என்ற மகளுக்கும் பிரித்துக் கொடுத்ததாகவும் இதனின் தென் பகுதி கடல் வயப்பட்டதால் அழிந்து போனது என்றும் கூறப்படுகின்றது. இவ்விடத்தில் இயமன் ஆண்ட பகுதி தெற்குப் பிரதேசமென்றும் இறந்தவர்கள் இயமநாட்டில் தெற்கில் வாழ்கின்றனர் எனக் கருதப்பட்டு, அவர்களைத் தென்புலத்தார் என அழைக்கும் மரபும் ஏற்பட்டிருக்கலாம். "பெண்ணினால் ஆளப்பட்டமையால் அப்பகுதி குமரி நாடு என்று வழங்கப்பட்டது" என்பது கருத்தாகவுமுள்ளது. இருந்த போதும் லெமூரியா, குமரிக்கண்டம் என்பன பற்றி ஆய்வுகளில் கிழக்குப்பகுதியில் உள்ளோர் கிழக்கு ஆசியாக்கரைக்கும்

வரலாற்றாய்வாளர்களிடையே முரண்பட்ட கருத்துக்களுமுண்டு. இவை மேலும் ஆய்வுக்குரியவை.

அடுத்து ஊழிக்காலங்கள் பற்றி ஆராயும் போது ஐந்து ஊழிக்காலங்கள் ஏற்பட்டதாகவும் முதல் ஊழி கி.மு16000ஆண்டில் ஏற்பட்ட போது லெமூரியாவின் பெரும்பான்மையான பகுதி அழிந்தது என்றும், இரண்டாம் ஊழி கி.மு.14058 இல் ஏற்பட்டுக் குமரிக்கண்டத்தின் ஏனைய பகுதிகள் அழிந்தது என்றும், மூன்றாவது ஊழியில் கி.மு.9564 இல் ஏற்பட்டு முழுமையாக அழிந்ததென்றும், நான்காவது ஊழியில் கி.மு.2939 க்கும் கி.மு.2387க்குமிடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டதென்றும், ஐந்தாவது ஊழி கி.மு.1715 இல் ஏற்பட்டதென வானஇயல், நிலவியல், புராண இதிகாச செய்திகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து ந. மகாலிங்கம் அவர்கள் கூறுகின்றார். இக்கடல் ஊழியின் காலங்களைக் கணிப்பதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் ஊழியால் பண்டைய தமிழகம் அழிந்தது என்பதில் வேறுபாடு இல்லை.

ஏறக்குறைய இதேபோன்ற கடல் ஊழி பற்றிய சம்பவங்கள் யூதர், பபிலோனியர், கிரேக்கர், மெக்சிக்கோவில் உள்ள செவ்விந்தியர்கள், சீனர், கல்தேயர்,இலங்கையர் முதலிய பல நாட்டினரும் வழங்கி வருகின்றனர். இவற்றுள் பலவும் அந்தந்த நாட்டு மக்களால் ஏறக்குறைய கிறிஸ்த்து பிறப்பதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாகக் கூறப்பெற்றுள்ளது நோக்கத்தக்கது. இவை அனைத்தும் ஒரே ஊழியைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்கிறார் கந்தையாபிள்ளை அவர்கள்.

முதல் ஊழியில் இலங்கை துண்டாகப் பிரிந்ததாகவும் முன் கூறப்பட்ட மூன்றாவது ஊழியின் இறுதியில் விந்திய மலைக்கு வடக்கில் இப்போது பெருநிலப்பரப்பு மேற்கிளம்பிய தென்பதும் இதற்குப் பின்பு கடல் கோள் ஏற்படும் போது வடக்கு நோக்கித் தள்ளப்பட்ட தமிழ் மக்கள் மெசபோடோமியா, வட இந்தியா, மத்திய ஆசியா முதலிய இடங்கட்குச் சென்றிருக்க வேண்டுமெனவும், அதேசமயம் லெமூரியாவில் மேற்குப்பகுதியிலுள்ளோர் சிலர் ஆப்பிரிக்காவுக்கும்,

சென்றனர் என்றும், லெமூரியாவின் கிழக்குப் பகுதியின் ஒரு துண்டே இன்றைய கலிபோனியா என்ற வட அமெரிக்கப் பகுதியெனவும் அப்பாத்துரை அவர்கள் கூறுகின்றார்.

மேலும் தமிழ் இலக்கியங்களில் குமரியாறு மற்றும் ப∴றுளியாறு பற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன என்பதும் நமது கொள்கைக்கு அரண் ஆகும்.

அவையாவன

"நன்னீர்ப் ப∴றுளி மணவினும் பலவே"

புறநானூறு - 9

எனவரும் அடியின் வாயிலாக ப∴றுளி ஆறு பற்றி அறிகிறோம். இவ் ஆறு இயற்கை நதி அன்று செயற்கை நதி என்பர். அதற்குச் சான்றாக

"நிலத் தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல"

எனும் மதுரைக காஞ்சி எனும் வரிகளைக் கூறுவர். நெடியோன் என்ற முதலாம் நிலம்தரு திருவில் பாண்டியன் இவ்வாற்றைப் பெருமலைத் தொடரிலிருந்து வெட்டிப் பெருவள நாட்டை ஏற்படுத்தினான் எனவும் அறிகின்றோம்.

"வடவேங்கடம் தென் குமரி
ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்"

தொல்காப்பியம்

"நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்
தமிழ் வரம் பறுத்த தண்புனனாடு"

சிலப்பதிகாரம் வேனிற்காதை

"வேங்கடம் குமரி மிம்புனல் ௵வமென்
றினான் கெல்லை தமிழது வழக்கே"

குமரிக்கண்ட நாகரிகம் எனக் கருதலாம். குமரிக்கண்டம்

மேற்குறிப்பிட்ட வரிகள் பண்டைய தமிழகத்தின் வட எல்லை விந்தியமும், தென் எல்லை குமரியாறும் என்பதனைக் காட்டுவன.

“வடிவே லெறிந்த வான்பகை பெறாது
ப.்.றுளி யாற்றுடன் பன்மலை, யடுக்கத்து
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசையாண்ட தென்னவன் வாழி”

சிலப்பதிகாரம் - காடுகாண்காதை

எனவரும் கி.பி இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சிலப்பதிகாரத்தின் வரிகள் மூலம் குமரிக்கண்டத்தின் அழிவு பற்றி தமிழ் நூல்களும் உறுதி செய்கின்றன.

சிலப்பதிகாரத்தில் மாடலன் எனும் அந்தணன் குமரியாற்றில் நீராடியதாகக் கூறப்படுகின்றது. ஆனால் கதை முடிந்த பின் குமரியாறு என்பது கடல் எனக்கூறப்படுகின்றது. ஆதலால் கோவலன் இறந்து சில காலத்துக்குப்பின் குமரியாறு கடல் கொள்ளப்பட்டது என எண்ணலாமென அறிஞர் அப்பாத்துரை குறிப்பிடுகின்றார்.

ஊழியின் விளைவாகக் குமரிக்கண்டதின் அழிவு மட்டுமன்றி வடக்கே இருந்த ராஜபுதானக் கடல் பரப்பு மறைந்து, மணல் வெளியானதோடு இமயத்தின் தோற்றமும் ஏற்பட்டது எனலாம். இப்பகுதியில் கிடைக்கின்ற கடல் சிப்பிகளும், நண்டு முதலிய கடல் வாழ் உயிர்களின் எலும்புக்கூடுகளும் சுவடுகளும் இவ்வுண்மைக்குச் சான்று பகர்கின்றன. மேலும் ராஜபுதான மணல் வெளி கடல் உப்பின் இயல்புடன் விளங்குவதாகும் என்பதையும் கவனிக்கத்தக்கது.

பொதுவாக உலக நாடுகளில் நதிகளைச்சுற்றியே நாகரிகம் வளர்ந்தது போல், குமரியாற்றை ஆதாரமாக்க கொண்டதே

அழிவெய்தியபின் தென்னிந்தியாவின் தொடர்ச்சியாக இலங்கை, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளை உள்ளடக்கிய தீவுகளில் நாவல் மரங்கள் செழித்தோங்கி வளர்ந்தமையைக் குறிப்பிடுகின்றார் அறிஞர் கந்தையாப்பிள்ளை. இந்தக் குமரியாறு மேருமலையை உற்பத்தி இடமாகக் கொண்டதாக இருக்கலாம். அதன் கரையில் அமைந்த பட்டினமே கபாடபுரம் என கருதப்படும். ப.்.றுளி, குமரி ஆகிய ஆறுகளுக்கு மத்தியில் இருந்த இடமே குமரிக்கண்டமாக அமைந்ததெனலாம்.

## 3.2 குமரிப்பூண்டு

மூலிகைகளுள் மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட முதல் மூலிகை எது என்பது ஆய்வுக்குரியது. மனித நாகரிகம் முதல் தோன்றிய குமரிக்கண்டத்தில் தழைத்து வளர்ந்த குமரிப்பூண்டா (Aloe Barbadensis) அல்லது வேத கால ஆரியர்கள் இருக்கு வேதத்தில் ஒன்பதாவது காண்டத்தில் 120 ஆம் பாடலில் கூறும் சோமப்பூண்டா என்பது வாதத்திற்குரியது. மறைந்த குமரிக்கண்டத்தில் (Lost Lemuria) வாழ்ந்த தமிழர் நாகரிகத்தின் வரலாற்று நூல்கள் கால வெள்ளத்தில் கரைந்து போய்விட்டதால் இம் முதல் நாகரிக மக்கள் பயன்படுத்திய மூலிகை பற்றிய ஆதாரங்கள் தற்போது இல்லை. இருந்தும் சோம வழிபாடு (Soma cult) சோமபான வழக்குகள் குமரிக்கண்டத்திலிருந்து மத்திய ஆசியா, ஐரோப்பா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குப் பரவியதற்கு தகுந்த ஆதாரம் உண்டு என்று நம்புவதால் சோமப்பூண்டும், குமரிப்பூண்டும் முன்னைய தமிழர்கள் கைக்கொண்ட சிறந்த மருந்துகள் என்று கொள்ள இடமுண்டு. இதைவிட யோக நிலையில் சித்தர்கள் தமது சிரசின் கீழ்ப்பாகத்தில் சொரியும் சோமபானத்தையுண்டு நீண்ட நாள் வாழ்ந்ததாகவும் ஐதிகங்கள் உள்ளன.

கற்ப மருந்தில் குமரிச்சாறும் ஒன்று என்பதை

"கொள்ளடா குமரி காமம் கொள்ளடா"

என்ற சித்தர் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

## 4 சிந்துவெளி நாகரிகம்

இந்தியாவின் வடமேற்கு எல்லையில் சிந்துநதி பாயும் பள்ளத்தாக்கில் (இப்பிரதேசம் தற்பொழுது பாகிஸ்தானிடம் போய்விட்டது.) சிறந்த நாகரிகம் ஒன்று வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்ததென்பது 1921 - 1922 இல் நடைபெற்ற அகழ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே சிந்துவெளி நாகரிகம் ஆகும். இதனுடைய காலம் கி.மு 3250 - கி.மு 2750 என்பது சேர்.ஜோன் மார்ஷல் என்பவரது கருத்து.

மேலும் தெற்குப் பஞ்சாப்பில் ஹரப்பா என்ற இடத்திலும், சிந்து மாகாணத்தில் மொஹஞ்சதாரோ என்ற இடத்திலும் தொல் பொருளாய்வாளர் சேர் ஜோன் மார்சல் (Sir John Marshall) நிகழ்த்திய அகழ்வாராய்ச்சிகளினால் கி.மு 3000 ஆண்டளவில் நன்கு திட்டமிட்டமைந்த பெரிய நகரங்கள் சிறந்து விளங்கின என்பது தெரியவந்துள்ளது. ஏறத்தாள ஆயிரம் மைல் இடைவெளியிலே அமைந்திருந்த இந்த இரு நகரங்களும் ஒரே வகையான அமைப்புடையனவாய் இருந்தமையால் இவை பரந்து கிடந்த ஒரு பேரரசின் இரு தலைநகரங்களாய் விளங்கியிருத்தல் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந் நாகரிகம் இருக்கு வேதம் காட்டும் ஆரிய நாகரிகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அதாவது தென் இந்தியாவில் உள்ள திராவிடருடைய நாகரிகத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. சிந்து வெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தோர் ஆரியர் அல்லாத இனத்தவரே (திராவிடர்) என்பதை இன்று ஆராய்ச்சியாளர் ஏற்றுக்கொள்கின்றனர். "சிந்துவெளி நாகரிகத்தின் சிற்பிகள் தென்னாட்டுத் திராவிடர்களே" எனும் கருத்து அழுத்தம் பெறுவதை எஸ்.இராமகிருஷ்னன் அவர்கள் தம் நூலில் குறிப்பிடுகின்றார். இக்காலத்தினை வலியுறுத்திப் பல ஆய்வறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் மருத்துவக்கலையின் தோற்றத்தைக் கண்டறியச் சிந்துவெளி அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் பெரிதும் உதவுகின்றன.

ஹரப்பா, மொஹஞ்சதாரோ ஆகிய இருநகரங்களிலும் நிலத்தின் கீழே பல படைகளாகப் புதையுண்டு கிடந்த ஏராளமான இலச்சினைகளும், உருவச்சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் யோகநிலையில் அமர்ந்திருக்கும் சிலையொன்றும் குறிப்பிடத்தக்கது. இதனைக்கொண்டு பண்டைக்காலம் தொட்டு சிவ வழிபாடு இருந்து வந்துள்ளது என்பது தெரிய வருகின்றது. அத்துடன் இவ்விடத்தில் சிவனே முதல் சித்தன் என்று வழங்கப்படுவதும் ஈண்டுக்கவனிக்கத்தக்கது. சிவன் என்னும் ஆண் தெய்வத்தைப்போலவே சக்தியாகிய பெண் தெய்வ வழிபாடும் சிந்து வெளி மக்களின் சமய வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இத் தெய்வம் தாய்த் தெய்வமாகவோ, நிலத் தெய்வமாகவோ வழிபட்டிருக்கலாம். இந்த அடிப்படையில் இன்றும் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்று அழைத்து வருவது வழக்கமாகவுள்ளது. ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட ஓர் இலச்சினையில் பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து செடியொன்று வளருவதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. "புவி ஏழையும் பூத்தவள்" என்பதுபோலப் பிற்காலத்தில் விவரிக்கப்பட்ட சக்தி தத்துவத்தை உட் கொண்டதாய், ஆழ்ந்த மெய்யியற் கருத்தை விளக்குவதாய் அமைந்துள்ளது.

இவை தவிர, பின்னர் சைவ சமயத்தில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் சிலவும் சிந்துவெளி மக்களின் சமய வாழ்க்கையில் இடம் பெற்றிருந்தன. புனித நீராடல் (தீர்த்தம்), அரசு போன்ற மரங்களை வழிபடல் (தலவிருட்சம்), காளை மாட்டை வழிபடல் (நந்தி), பாம்பு வழிபாடு (நாக தம்பிரான்) என்பவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம். இவற்றுள்ளே சிறப்பாகக் கூறத்தக்கது சிவலிங்க வழிபாடாகும். ஹரப்பா நகரிலே சிவலிங்க வடிவில் அமைந்துள்ள கரு நிறக்கல் ஒன்று காணப்பட்டுள்ளது. அன்றியும் அந்நகரிலே அகழ்ந்தெடுக்கப்பட்ட கூம்புருவான பல பொருட்கள் சிவலிங்க வடிவங்கள் என்றே கருதப்படுகின்றன. சிவலிங்கம் என்பது சிவனைக்குறிக்கும் அடையாளமாகும். பீடம் சக்தியைக் குறிப்பது. சக்தியும் சிவமும் இணைந்து உலகைப் படைக்கும் (Fertility Cult) தத்துவத்தை விளக்குவது என்றும், இதேபோல் முதன் முதலிலே காணலாம். இந்துக்களின் வைதீக மரபில் இம் மரபுகள் இன்று

வணக்கத்துக்குரிய பெண் தெய்வங்களாக ஆக்கப்பட்டு அதனைச்சக்தி வழிபாடு என்றும், கருவளக் கோட்பாட்டையும் (Embryonic Cult) விளக்குவதாகவும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளில் ஒருவகைச் சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த மொழி தமிழின் தொன்மை வடிவமாக இருக்கலாமென்றும் அது பழைய திராவிட மொழியென்றும் ஹென்றி ஹிராசு பாதிரியார் (Rev.Henry Heras) குறிப்பிடுகின்றார். ஆனால் இன்று வரை இது உறுதியாக்கப்படவில்லை. இது உறுயாக்கப்படுமேயானால் வியக்கத்தக்க பல செய்திகளை உலகுக்கு அறிவிக்கக் கூடியதாய் இருக்கும். ஆயினும் இன்று வரை நமக்கு கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு நோக்குமிடத்து, சிவ வழிபாடு - அதாவது முழுமுதற் கடவுளை அம்மையப்பராக வழிபடும் சிவ நெறி - இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்து வெளியில் தோன்றி நிலவியது என்பது உறுதியாகின்றது. இதை அடிப்படையாக வைத்துச் சிவனே முதல் சித்தன் என்ற கோட்பாடும் வந்திருக்க வேண்டுமெனக் கருதலாம். இதற்கு ஆதாரமாக மதுரைத் தமிழ் சங்க பேரகராதியைக் குறிப்பிடலாம்.

இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிக வாழ்வில் அகத்தியர் ஐதீகம் ஒன்று இருந்ததாக அறிகின்றோம். இதனை கி.மு3500 ஆம் ஆண்டிலிருந்து கி.மு1760 ஆம் ஆண்டு வரையும் உள்ள காலப்பகுதியில் இருந்ததாக சேர்.ஐராவதம் மகாதேவன் (Sir Iravatham Mahadevan) எடுத்துக் காட்டியுள்ளார். அகத்தியர் பற்றிய கதை மரபுகள் பல வடிவங்களில் தீப கற்ப இந்தியாவில் நிலவி வருகின்றது. காகம் ஒன்று அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்த கதை, விந்திய மலையை அகத்தியர் அடக்கிய கதை, மகோதரன், குண்டோதரன் ஆகிய அரக்கர்களை அழித்த கதை, உலகம் சமநிலை பெற்றுக்கொண்டதற்காக அகத்தியர் கைலையிலிருந்து தெற்கே வந்த கதை என அவற்றுள் சில திருவிளையாடற் புராணத்திலும், திருக்கைலாய புராணத்திலும் கூறப்பட்டிருப்பதைக்

பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. மேலும் அகத்தீஸ்வரம் என்றொரு கோவில் தொண்டை மண்டலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதும், இந்தோனேசியாவில் அகத்தியருக்கென ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதும் இந்துக்களின் பரிவாரத்தெய்வங்களுள் அகத்தியர் ஒருவராக இணைக்கப்பட்டிருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சிந்துவெளி மக்கள் சுகாதார முறைப்படி அமைக்கப்பட்ட வீடுகளைக்கொண்ட நகரங்களில் வசித்தார்கள் இதற்குச் சான்றாக அகழ்வாராய்ச்சியிலிருந்து கிடைக்கப்பெற்ற வடிகாலமைப்புக்கள் அமைந்துள்ளன. இவற்றை விட வேளாண்மை முதல் நெசவுத்தொழில் ஈறாக மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழில்களிலும், வாணிபத்திலும் ஆடல் பாடல்களிலும், விஞ்ஞான அறிவிலும் அவர்கள் சிறந்து இருந்தனர். இவற்றைத் தவிர யோக நிலையையும், மந்திரம், வசியம் முதலியனவற்றையும் அறிந்திருந்தனர். மறுபிறப்புக் கொள்ளையையும் இவர்கள் நம்பினர். இவையாவும் இன்றைய இந்து சமய நம்பிக்கைகளுடன் ஒத்திருப்பதைக்காணலாம்.

## 4.1 மருத்துவக்கலை

இன்றைய சித்த ஆயுள்வேத மருத்துவர்களால் பயன்படுத்தப்படும் பொருளான சிலாசத்து மொஹன்சதாரோவில் கிடைத்திருக்கின்றது. இதைவிட ஒரு வகை மீனின் (Cuttle Fish) எலும்பினைக் கண், காது, தொண்டை முதலிய நோய்கட்கும் உபயோகித்துள்ளனர். மான் கொம்பை பொடியாக்கி அதனை மருந்தாக உட்கொண்டனர். பவளம், வேப்பிலை முதலியவற்றையும் உபயோகப்படுத்தியுள்ளனர். மேலும் சிந்துவெளி மக்கள் நன்றாகப் பசி எடுப்பதற்கும், உண்ட உணவு செரிப்பதற்கும் ஒரு வேரினைப்பொடி செய்து உண்டனர். இவை யாவும் இந்திய மருத்துவக் கலையின் கரு முதல்களாக இருந்தன என்று அறிஞர் தீட்சித் கூறுகின்றார். இன்னும் மாட்டுக் கொம்புகளைக் கிண்ணம் எழுச்சியால் இவை (சித்தர் காலம்) சித்த மருத்துவமாக

போல் குடைந்து அவற்றை மருந்து வைக்கும் பாத்திரமாகப் பயன்படுத்தினர் என்றும் அறிகின்றோம்.

சிந்துவெளி அகழ்வாராய்ச்சி குறிப்பிடும் மருந்துப் பொருளான வேப்பிலை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே பயனாகி வருகின்றது. இதனைத் தொல்காப்பியச் செய்யுளில் காணப் பெறும் "வாயுறை வாழ்த்து" எனத் தொடங்கும் நூற்பாவில் வரும்

"வேம்பும் கடுவும் போல"

என்ற தொடர் மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்தும்.

நாட்டுப்புற மக்கள் மான் கொம்பைச் சந்தனக் கல்லில் அரைத்து மார்பு வலிக்குப் போடுதல் சிந்துவெளி நாகரிக மருந்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் பாளையம் கோட்டை அரச சித்த மருத்துவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சியில், நெஞ்சில் ஏற்படும் நோவுக்கு (இதயத்தசைக்கு குருதி செல்வது குறைவினால் ஏற்படும் வேதனை) - Angina Pectoris - மான் கொம்பு பஸ்பம் சிறந்த பயனைக் கொடுப்பதாக ஆய்வு முடிவுகள் வெளியிட்டுள்ளனர். இவற்றை அடிப்படையாக வைத்துச் சித்த வைத்தியத் திரட்டு நூலிலும் மான் கொம்பு பஸ்பம் மார்பு நோய்க்கு உகந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சான்றுகளைக் கொண்டு நோக்கும் போது வேத காலத்துக்கு முன்பு குமரி முதல் இமயம் வரை ஒரே வகையான மருத்துவ முறை நிலவியிருந்தது என்பதை அறியலாம். இதனைப் பழம் திராவிட மருத்துவ முறையாகக் குறிப்பிடலாமென டாக்டர் வெங்கடேசன் குறிப்பிடுகின்றார். இதனை பேராசிரியர் அம்பை அருணாசலமும் உறுதி செய்துள்ளார். பழந்திராவிட மருத்துவ முறையிலிருந்து பிறந்தவையே சித்த மருத்துவமும், ஆயுள் வேத மருத்துவமும் என டாக்டர் வெங்கடேசன் குறிப்பிடுகின்றார்.

வடக்கில் ஆரியர் வருகையால் பழந்திராவிட மருத்துவம் கலப்புற்று ஆயுள்வேதமாக மாறியது. தெற்கில் வாழ்ந்த அறிவர்உருமாறியது.

சித்த மருத்துவக் கலையின் புராதன வடிவம் பழந்திராவிட மருத்துவ கலையுடன் தொடர்புடையதாகக் கருதலாம். தக்க சான்றுகள் கிடைக்கும் வரை இதனைக் கருதுகோளாகக் கொள்ளமுடியும். என்றாலும் சித்த மருத்துவத்தின் கரு முதல்கள் தொல்காப்பியத்தில் நிறைவாகக் காணப்படுவதால் அதன் காலத்தைத் தொல்காப்பியக் காலத்துக்கு முற்பட்டதாகத் தெளிவாக வரையறை செய்யலாம். இதன் அடிப்படையில் தமிழ் மருத்துவக் கலையின் தோற்றம் இற்றைக்கு 2500 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதலாம்.

## 5. திராவிடர் ஆரியர் எனும் சொற்பதங்கள்

இவற்றில் முதலில் திராவிடர் பற்றிக் கவனிக்கலாம்.

### 5.1 திராவிடர்

திராவிடர் என்ற பெயர் குருதி இனத்தைக் (Race) குறிக்கின்றது என்று கொள்வதை விட, ஒரு மொழியினத்தைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமாகும். திராவிடர் என்பது வட சொல் என்றும் Dra என்பது ஓடு (To run) என்னும் பொருளையும் Vid என்பது ஒரு துண்டு (Piece of Land) நிலத்தையும் குறிக்கும் என்றும், குறிப்பிட்ட நிலம் நோக்கி விரட்டப் பெற்றவர்கள் அல்லது ஓடியவர்கள் என்ற பொருளைத் தரும் என்றும் எம் ஸ்ரீனிவாசக ஐயங்கார் கூறியுள்ளார்.

திராவிட என்ற வட சொல்லுக்குத் தெற்கு என்பது பொருள். திராவிட மொழிகள் என்றால் தென் மொழிகள் என்ற பொருள் எனவேதான் அச் சொல் ஒரு இனத்தைவிட மொழியினரைக் குறிக்கின்றது என்பது பொருத்தம் என்கிறார் சிலேட்டர் (Slater) எனும் அறிஞர். இக் கருத்தைப் பெருமளவு மிகவும் வலிமையுடன் ஆதரிக்கின்றார் தமிழரின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் 6. 500 வருடங்கட்கு முன் வாழ்ந்த பிள்ளை லோகாசாரியர் பெரிய

நூலாசிரியராகிய பேராசிரியர் இராமச்சந்திர தீட்சிதர் இருபதாம் நூற்றாண்டு இந்திய சேம்பர்ஸ் அகராதியும் (Chambers Dictionary) இதனையே குறிக்கின்றது.

1990 ஆம் ஆண்டில் மொரிஷியசில் நடைபெற்ற உலகத்தமிழ் மகாநாட்டில் கலந்து கொண்ட தொழிலதிபரும், அறிஞருமான நா. மகாலிங்கம் Dra என்ற சொல்லுக்கு நல்லது அல்லது அசைதல் (Good or Morbile) என்பது பொருள் என்றும், ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அலைந்து கொண்டு இருந்திருக்கலாம் என்றும் அதனால் இப் பெயர் பெற்றிருக்கலாம் என்றும் அறியக்கிடக்கின்றது என்கிறார்.

மொழிஞாயிறு என்ற சிறப்புப் பெயர் பெற்ற தேவநேயபாவாணர் திராவிடம் என்ற சொல் தமிழைக் குறிக்கின்றது என்று கூறி அதற்கான சான்றுகளை அவர் எழுதிய தமிழ் வரலாறு என்ற நூலில் விபரமாகத் தந்துள்ளார். அவையாவன -

1. ஆதிசங்கரர் தமது சௌந்தர்யலகிரியின் 75 ஆவது பாடலில் "திராவிடச்சிசு" என்ற சொல்லால் ஞானசம்பந்தரைக் குறிக்கின்றார். தமிழ்க் குழந்தை என்று பொருள் தருவது இது.

2. கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குமரிலபட்டர் "ஆந்திர திராவிட பாஷா" எனத் தெலுங்கையும், தமிழையும் குறிக்கின்றார்.

3. தாயுமானவர் "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்ற பாடலில் திராவிடம் எனத் தமிழைக் குறிக்கின்றார்.

4. பாகவத புராணம் - சத்திய விரதன் (மனு2) என்னும் தமிழ் அரசனைத் "திராவிடபதி" என்கிறது.

5. கி.பி. 470 இல் வச்சிரநந்தி என்னும் சமணர் மதுரையில் அமைந்த சங்கம் "திராவிடச் சங்கம்" எனப் பெற்றது.

திரு மொழி சிறப்புப் பாயிரத்தில் "தமிழ் இலக்கணத் திராவிட சாஸ்திரம்" எனக் குறிக்கின்றார்.

7. நாலாயிரத் திவ்யப்பனுவல் - "திராவிட வேதம்" எனப் போற்றப் பெறுகிறது.

8. சிவஞான முனிவரின் மெய்கண்ட நூல் - "திராவிட மாபாடியம்" எனச் சிறப்பிக்கப் பெறுகிறது.

9. சபாபதி நாவலரின் தமிழ் இலக்கிய வரலாறு - "திராவிடப் பிரகாசிகை" எனப் பெறுகிறது.

எனவே தமிழ் அல்லது திராவிடம் ஆகிய சொற்கள் ஒரே பொருள் உடையன என்பது தெளிவாகிறது. ஆதலின் திராவிடம் - திராவிடன் ஆகிய சொற்கள் ஒரு மொழியையும், அதனைப் பேசும் இனத்தையுமே குறிக்கின்றது என்பது தெளிவு. திராவிட என்பது ஒரு இனமாகக் கருதப்பெற்ற வழக்கு காலத்தால் பிற்பட்டதே.

இவற்றைத் தவிர உலக மக்களுக்கும், மொழிகளுக்கும் பிறப்பிடமாகிய தமிழகத்தை மேன்மக்கள் திரு இடம் என்று வழங்குவாராயினர் என்றும், திரு என்பது செல்வம், மேன்மை, புகழ், அழகு எனப் பல பொருள்படும். திரு இடம் என்பது திராவிடம் எனச் சந்தி சேர்த்து மருவி வழங்குவதாயிற்று எனவும், அதனால் தமிழ்திராவிடம் எனவும், தமிழ் மக்கள் திராவிடர் என்றும் பெயர் பெற்றுள்ளது என உத்தமராயன் குறிப்பிடுகின்றார். மொழிநூலாய்வாளர் இவற்றினை மேலும் தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுவாகத் திராவிட மொழிகள் தென் இந்தியாவின் மொழிகளாகவே உள்ளன. 1911 ஆம் ஆண்டின் மக்கள் கணிப்பின் படி ஆறு கோடியே இருபத்து நூறாயிரத்துக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்ற பதினைந்து மொழிகள் திராவிட மொழிகளாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன எனத் திராவிட எனச் சொல்ல அதைக்கேட்டு தென்னகம் வந்த அகத்தியர் ஓர் இடம்

மொழிகளின் ஆய்வாளரான சிலேற்றர் என்பார் கூறுகின்றார்.

திராவிட மொழிகளுள் பண்பாட்டில் தலை சிறந்ததும், தூய்மை மிக்கதும் தமிழ்மொழியாகும். இது இந்தியாவில் ஒரு கோடியே எண்பத்து நூறாயிரம் மக்களால் பேசப்படுகின்றது. அத்துடன் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியிலும், மலையகத்திலும், அஸ்ஸாம், பர்மா, மலேசியா முதலிய நாடுகளில் பல்வேறு பகுதிகளிலும் குடியேறியுள்ள தமிழரால் பேசப்படுகிறது. சென்னை முதல் கன்னியாகுமரி வரை தமிழே தாய் மொழியாகவுள்ளது. ஆந்திரம் அல்லது தெலுங்கில் இரண்டு கோடியே நாற்பது நூறாயிரம் பேர்களால் பேசப்படுகின்றது. கன்னடம் ஒரு கோடியே ஐம்பது நூறாயிரம் மக்களால் பேசப்படுகிறது. மலையாளம் ஏறக்குறைய எழுபது நூறாயிரம் மக்களால் பேசப்படுவது இவையே தலையான திராவிட மொழிகள் எனலாம்.

## தமிழ்

தமிழ் என்ற சொல் தண்மை அல்லது ஒப்பற்றது என்னும் பொருளுடையது. இச் சொல்லின் அடியாகப் பிறந்த தமிழ் என்னும் சொல்லுக்கு ஒப்பற்றது என்பது பொருள் எனக் கொள்ளலாமென இரா. மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார்.

தமிழ் என்ற சொல்லுக்கு இளமை என்ற கருத்தும் உண்டு.

இனி "இனிமையும் நீர்மையும் தமிழாகுமே" என்னும் பிங்கலை நிகண்டினை ஆதாரமாகக் கொண்டு தமிழ் என்னும் சொல் இனிமை என்ற பொருள் தருவது எனக் கொள்ளலாம். ஆதலின் பேசுவதற்கும் கேட்பதற்கும், எழுதுவதற்கும் இனிய மொழி தமிழ் எனப் பெயரிடப் பெற்றது எனக் கூறலாம்.

ஒரு முறை அகத்தியர் முருகனிடம் வட மொழிக்கு இணையான ஒரு மொழியைப் படைத்துத் தருதல் வேண்டும் எனக் கேட்க அவரும் ஏற்கனவே தென்னகத்தில் உண்டு அங்கு செல்க

வந்ததும் இனிய மணம் (நறுமணம்) வந்ததை உணர்ந்து தோண்டிப் பார்க்கத் தமிழ் ஏடுகள் இருப்பதைக் கண்டு “இனிமை, இனிமை” எனக் கூறியமையால் தமிழுக்கு இனிமை எனப் பெயர் பெற்றதாக ஒரு கதையும் தமிழகத்தில் உள்ளது. தேன் போன்ற இனிய மொழி என்பதே காலப்போக்கில் தென்மொழி என மருவித் தென் திசையில் உள்ளோர் மொழி எனப் பொருள்பட நின்றது எனவும் கருதலாம். இங்ஙனம் இச்சொல்லுக்குப் பலவகையான விளக்கங்களைக் காணமுடிகின்றது.

## 5.2 ஆரியர்.

இனித் திராவிடம் என்ற சொல்லோடு இணைந்த ஆரியர் என்ற சொல்லை எடுத்துப் பார்க்கையில் “Ar” என்பதை அடிச்சொல்லாகக்கொண்டு “Arya” என்பதற்குக் கலப்பையை பயன்படுத்தியவர்கள் (Ar = கலப்பை) எனப் பொருள் விளக்கம் தருகின்றார் கல்யாணராமன்.

வேதங்களில் ஆரியன் என்ற சொல்லுக்கு எவன் ஒருவன் உயர்ந்த ஒழுக்கம் முதலிய கோட்பாட்டுடன் வாழ்கிறானோ அவன் ஆரியன் எனப்படுவான் என விளக்கம் தரப்பட்டுள்ளது. இவ் விளக்கத்தின்படி பார்க்குமிடத்து எவர் எல்லாம் ஒழுக்கம் என்னும் உயர் பண்புகள் வழி ஒழுகுகின்றார்களோ, அவர்கள் எல்லாம் ஆரியர் என்று குறிக்கப் பெறுதல் வேண்டும் அல்லது குறிக்கப் பெற்றனர் எனலாம்.

ஆரியர் என்போர் அக்கினியை வழிபடுகின்றவர்கள் என்று விளக்கம் தருகின்றார் பி.டி.ஸ்ரீனிவாசகஐயங்கார். குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவர்களும் ஒளி வழிபாடு உடையவர்கள் ஆவார். ஜொராஸ்டிரிய மதம் சார்ந்தவர்களும் ஒளி வழிபாடு செய்பவர்களே. எனவே அவர்களையும் ஆரியர் எனக் கூறவேண்டியிருக்கும். ஆகையால் பி.டி.ஸ்ரீனிவாசகஐயங்காரின் கருத்து மேலும் ஆராயத்தக்கது.

ராமாயணம்,

ஆரியன் என்பது ஒரு தா்மத்தைக் குறிக்கின்றது. அதாவது அனைவரையும் உயா்த்துதலாகிய செயல் என்கிறாா் நா.மகாலிங்கம்.

1853 ஆண்டில் ஆரியன் என்ற சொல்லை ஓா் இனத்துடன் இணைத்து முதன் முதல் கூறியவா் மாக்ஸ்முல்லா் (Max Muller) ஆகும். பின் வந்த பல மேலை நாட்டவா் இத் தவறைத் தொடா்ந்து செய்யத் தொடங்கினா். எனவே ஆரியா் என்போா் ஓா் இனம் சாா்ந்தோா் என்பதும், திராவிடா்கள் ஓா் இனம் என்பதும் புரட்டாகி விடுகின்றது என்கிறாா் வி.ஆா்.இராமச்சந்திர தீட்ஷிதா் இவை ஒரு புறமிருக்க பொதுவிலே ஆரியா் நாடோடிகளாய் கால்நடை மேய்ப்போராய் வந்தடைந்தனா் என்பது அவா்களின் வேதங்களிலேயே சொல்லப்படுகின்றது என சத்தாா் உஸ்மான் அலீ குறிப்பிடுகின்றாா். உண்மையில் ஆரியன் என்ற சொல் “அறி” என்பதை அடியாகக் கொண்டு இருத்தல் வேண்டும். அறிவு, அறிதல், அறிந்தவன் எனும் பொருள் தரும் சொற்களுக்கு இது அடிச் சொல்லாயிற்று.

குருவாகிய முனி குறுகிய முனியாகக் காலப்போக்கில் கருதப் பெற்றது போல் அறி-அரி மாற்றம் பெற்றிருத்தல் வேண்டும். அறிவன்-அரிவன்-ஆரியன் எனவாயிருக்கலாம் எனக் குறிப்பிட்ட பேராசிரியா் இரா மாணிக்கவாசகம் அவா்கள் ஆரியா் என்ற சொல் குறிப்பிட்ட எந்த ஒரு இனத்தையும் குறித்திருக்க வாய்ப்பில்லை என்கிறாா்.

பேரறிவு பெற்றவன் என்னும் பொருளில் அறிவா் என்னும் சொல் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளதும் கவனிக்கத்தக்கது.

ஆரியன் நற்குணமுடையோன் நற்குடி பிறந்தோன் - அமரம்,
புண்ணியம் - சப்த ரத்னாவளி நிகண்டு,
மதிக்கத்தக்கவன், தயாளகுணமுள்ளவன் - வால்மீகி

தார்மீகன், தர்மசீலன், - மனுஸ்மிருதி, (அத்தி 10: ஸ்லோ757) தலைவன், அறிவாளி - பாரதம்

என இச்சொல் பல பொருள் விளக்கங்களை வட மொழி நூல்களில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

சீதையை இராவணன் கவர்ந்து செல்லும் போது தன் உயிரையும் பொருட்படுத்தாது காப்பாற்றிய ஜடாயுவைச் சீதை "ஆரிய" என்று அழைத்ததாகக் கூறப்படுகின்றது. இவற்றிலிருந்து மேலோன் - உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமன் என்ற பொருளே தவிர சாதியைக் குறிக்கவில்லை எனத் தெளியலாம்.

இதேபோல் போர்க்களத்தில் தனது அண்ணன் தம்பியருடன் போர் தொடுப்பது பாவம் என எண்ணி வில்லையும் அம்பையும் கீழே போட்டஅருச்சுனனைப் பார்த்துக் கண்ணன் "ஆரிய ஜுஸ்ட்ட" (Arya Jushta) என்றான். சத்திரியனுக்குரிய வீரம் இல்லாதவன் என்பதே அதன் பொருள். இவற்றிலிருந்து இச் சொல் சாதியைக் குறிக்கவில்லையென்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

"பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே"

என மாணிக்கவாசகரும் இறைவனை அழைப்பது சாதியைக் குறிப்பிடவில்லை என்பதைப் புலப்படுத்துகிறது.

மேலே கூறப்பட்ட சான்றுகளைக் காட்டிலும் அதிக உறுதியான எடுத்துக் காட்டு ஒன்று உண்டு. வேதகாலங்களில் மிகப்பழைய "இருக்கு" (Rig) வேதத்திலேயே சாதியைக் குறிக்கும் சொல்லாக இது வழங்கப் பெறவில்லை என்பதைக் காண்க.

"நான் தாசர்களிடமிருந்து ஆரியன் என்ற பட்டத்தை நீக்கி விட்டேன்." என இந்திரன் கூறுவதாக வரும் பகுதி குறிக்கத்தக்கது.

ஆயுள்வேத மருத்துவமும் உருவாகி வளர்ந்தன என்பது புலனாகும்.

மேலும்

"ஓ வஜ்ரி நீ தாசர்களை உனது ஆற்றலால் ஆரியனாக்கினாய், தீயவர்களை நல்லவனாக்கினாய், எங்களுக்கும் அந்த அறிவையும் ஆற்றலையும் தா, பகைவர்களை வெல்வோம்" இப்படியும் ஒரு பிரார்த்தனை இருக்கு வேதத்தில் உள்ளது.

எனவே ஆரியன் என்ற சொல் ஆரம்ப காலங்களில் உயர்ந்தோரை மட்டுமே குறித்து வந்தது என அறியலாம். பிற்காலத்தில் இலக்கிய வழக்கிலும், உலகியல் வழக்கிலும் இவை சாதியைக்குறிக்கப் பயன்படுத்தப் பெற்றது எனக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட விடயங்களிலிருந்து வேதகாலத்துக்கு முன் மக்கள் இன மத வேறுபாடின்றி ஒற்றுமையுடன் சீராக வாழ்ந்தாகவும் வேதகாலத்துக்குப் பின்பே இப்படியான இன மத வேறுபாடுகள் உருவாகி மக்களை பிரித்து ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கிச் சமுதாயத்தில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தி விட்டனர் என்று கூறலாம்.

தமிழ் நாட்டில் ஆரியன் என்ற சொல்லோடு ஒத்ததாக அந்தணர், ஐயர், பார்ப்பான் முதலிய சொற்கள் குறிப்பிட்ட ஓர் இனத்தைக் குறித்து வழங்கப் பெறுகின்றன. என்றாலும் இவற்றை ஆரம்பகாலங்களில் மேலோர் அல்லது அறவோர் என்ற பொருளில்தான் வழங்கி வந்தனர் என்பதையும் காலப்போக்கில் ஓர் இனத்தைக்குறிக்கும் சொற்களாக மாறிவிட்டன அல்லது மாற்றப் பெற்றன எனவும் டாக்டர்.இரா.மாணிக்கவாசகம் கூறும் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். இம்மாற்றம் இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்க துணை நின்றது என்பதுவும் மிகவும் வேதனை தரும் நிகழ்ச்சியாகும் என வே.நெடுஞ்செழியன் குறிப்பிடுகின்றார். இதே போல் ஆயுள் வேத மருத்துவத்திலிருந்து சித்த மருத்துவம் உருவானது என்று கூறுபவர்களும் உள். இப்படியான கூற்றுக்களால் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் குழப்பநிலையேற்படுகின்றது. எனவே இதுவரை கூறியவற்றிலிருந்து திராவிட மருத்துவக் கலையில் இருந்தே சித்தமருத்துவமும்

## 5.3 திராவிடரும் ஆரியரும் (*இன அடிப்படையில்*)

இனி இன அடிப்படையில் கூறப்படும் ஆரியர், திராவிடர் ஆகியோர் பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

கடல் கோள்களால் வடக்கு நோக்கித் தள்ளப்பட்ட தமிழ் மக்களே மொசப்பட்டேமியா, வடஇந்தியா மத்திய ஆசியா முதலிய இடங்கட்கு சென்றிருக்க வேண்டும். இதே சமயம் லெமூரியாவின் மேற்குப் பகுதியில் உள்ளோர் சிலர் ஆபிரிக்காவுக்கும், கிழக்குப்பகுதியில் கிழக்கு ஆசியாவுக்கும் சென்றிருக்க வேண்டும், லெமூரியாவின் கிழக்குப் பகுதியான ஒரு துண்டே இன்றைய கலிபோனியா என்ற வட அமெரிக்கப் பகுதியாகும். வடக்கே துருவம் வரை சென்றவர்கள் அப்பகுதி குளிரக்குளிர மீண்டும் தெற்கு நோக்கித் திரும்பியிருத்தல் வேண்டும்.

வடக்கே வாழும் நாட்களில் குளிராலும், பிற குளிர் நாட்டு மக்களுடன் கலந்ததாலும், குளிரைத்தடுக்க அணிந்த ஆடைஅணிகளாலும், சுற்றுச் சூழலின் மாற்றத்தாலும் அவர்கள் நிறம் மாறி வெள்ளை நிறத்தினர் ஆயினர். சூட்டினால் கறுத்த ஆடைஅணிகள் அணிந்திருந்த மக்களை விட தம்மை உயர்வாக மதித்துக் கொண்டனர் என்கிறார் கா.அப்பாத்துரை.

ஆரியர்கள் இந்தியாவுக்கு மத்திய ஆசியாவிலிருந்து கி.மு. 1500 இல் வந்தவர்கள் என்ற கொள்கை மிகப் பரவலாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கொள்கையை முதன் முதல் எழுதியவர் ஜெ.ஜி.ரோட் (J.G.Rhode) என்பவர் 1820 ஆம் ஆண்டு இக்கொள்கையை ஆங்கிலேயர் பிரித்தாளும் முறைக்காகப் பயன்படுத்திக் கொண்டு அதிக முக்கியத்துவம் தந்து வளர்த்துவிட்டனர் எனப் பேராசிரியர் இரா மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார்.

மேலே குறிப்பிட்ட டாக்டர் நடராசாவின் குறிப்பு உண்மைபொதுவாக இவர்கள் நாடோடியாகத் திரிந்துகொண்டிருந்தார்கள் என்றும், ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு வளமான பகுதியை தேடிய வண்ணம் மத்திய ஆசியாவில் இருந்து கைபர் கணவாயூடாக இந்தியாவுக்குள் நுழைந்து அங்கிருந்த திராவிட இனத்தவரை விரட்டி விட்டு குடியேறினர் என்பதும் சாதாரணமாக இந்திய நாட்டில் பாடசாலை மாணவர்கள் படிக்கும் இந்திய வரலாறாகும். இவ் வரலாற்றைப் பார்க்கும் போது ஆரியர்கள் திராவிட இனத்தவரை விரட்டிக் கலைத்தார்கள் என்று கூறும் போது ஆரியர்கட்குப் பயந்து திராவிடர்கள் ஓடினார்கள் என்றும் ஆரியர்களை எதிர்த்து நிற்க முடியாதளவு பலம் இல்லாதவர்கள் என்றும் கருதவேண்டியுள்ளது. இவர்களின் வாழ்க்கை முறையை ஆராயும் போது ஆரியர்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து கொண்டு இருந்ததால் அவர்களுக்கு எதிர்ப்படும் விலங்குகளையும் மற்றும் எதிர்ப்புக்களையும் சமாளிப்பதற்குக் கையில் பாதுகாப்பு ஆயுதங்கள் வைத்திருக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது எனலாம். இதனால் அவர்களுக்கு எதிர்த்து விரட்டும் தன்மை இருந்திருக்கலாமென்று கருத இடமுண்டு. ஆனால் திராவிட இனமோ ஒரே இடத்தில் தமது வாழ்க்கை முறையை ஸ்திரமாக அமைத்துக் கொண்டிருந்தமையாலும் வேளாண்மை செய்தமையாலும் நாடோடியாகத் திரியாமல் இருந்தமையாலும் அவர்களுக்குப் பிறரை எதிர்த்துப் போராட வேண்டிய சந்தர்ப்பம் இன்மையால் அவர்கள் போதிய ஆயுதங்கள் முதலிய படைக்கருவிகள் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லையெனக் கருத இடமுண்டு. இக்காரணங்களைக் கொண்டு ஆரியர் திராவிட இனத்தை விரட்டினார்கள் என்பதுவும், அவர்கள் பயந்து ஓடினார்கள் என்பதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

இதேயிடத்து மொஹஞ்சதாரோ என்ற சொல் "இறந்தார் இடம்" என்று பொருள்படும் புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த எலும்புக் கூடுகள் சில கூரிய கருவியால் வெட்டப்பட்டு உள்ளன எனத் தெரிகிறதென்றும் ஒரே இடத்தில் பல எலும்புக்கூடுகள் குவியலாகக் கிடக்கின்றன என்றும் இது பகைவர்களால் படுகொலை நடந்தது என நினைக்க இடமுண்டு என்றும் டாக்டர் K. நடராசன் குறிப்பட்டுள்ளார்.

என எண்ணுவோமாயின் முதல் குறிப்பிட்ட ஆரியர்கள் என்பவர்கள் உயர்ந்தவர்கள், சான்றோர், திருந்தியவர்கள் என்று கூறுவது சற்றும் பொருந்தாது எனலாம். இவ்விடத்தில் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை உண்டு பண்ணும் வரலாறாக அமைகின்றது. இத்தகைய ஆரியர்களின் வருகை பற்றிக்கூறும் சம்பவங்கள் முற்றிலும் தவறான செய்தி என்பதை திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியிலும், (National College) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த P.T. ஸ்ரீனிவாச ஐயங்கார் இதனைப் பல ஏதுக்களால் நிலை நாட்டியுள்ளார்.

இத்தகைய தவறான செய்திகளெனக் கருதப்படும் வரலாறு பற்றிக் காலம் சென்ற பாரதப் பிரதமர் பண்டிற் ஜவகர்லால் நேரு நூல் ஒன்றில் “நான் இளமையில் படித்த இந்திய வரலாறு பெரும்பான்மையும் தவறானதொன்றாகும்” என்கிறார்.

இந்தக் கருத்தையே விவேகானந்தர் எடுத்துக் கொண்டு வலியுறுத்தும் போக்கில் “நம்நாட்டின் வரலாற்றை எழுதிய மேலை நாட்டு அறிஞர்கள் பலரும் நமது வீழ்ச்சிகளையும் குறைபாடுகளையும் மட்டும் பெரிதாக்கி எழுதிவிட்டனர் எங்கிருந்தோ வந்த மேலைநாட்டவருக்கு நம்நாட்டின் வரலாறு, கலாச்சாரம் ஆகியவற்றின் அருமையும், பெருமையும் எவ்வாறு தெரிந்திருக்க முடியும்” எனச் சாடுகின்றனர்.

ஆரியரின் வருகை கி.மு. 1500 என்பது இக்கொள்கை உடையவர்களது கருத்தாகும். (கி.மு. 1500 - கி.மு. 1800) இதற்கு இந்திரன் தலைமை தாங்கினான் என எஸ். இரத்தினசாமி கூறுகின்றார். இருக்கு வேதகாலமாகிய கி.மு. 5000 முதல் கி.மு. 8000 வரை இந்திய மண்ணிலேயே இருந்து வரும் ஆரியர்கள் எவ்வாறு திராவிடர்கள் மீது படை எடுக்க இயலும் எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது.

வில்டுரான்ட் (Willdurant), விடல் (Weddel), சுவாமி சாங்கியானந்தா (Swamy Sankhyananda), டாக்டர் பி.கே. முகர்ஜி (Dr B.K. Mukherjee) ஆகிய அறிஞர்களில் சிலரும் தயங்காமல் ஆரியர்களின் இருக்கை இந்தியாவே என்பதையும் அவர்கள் வெளியே இருந்து வரவில்லை என்பதையும் அதற்கு இருக்கு வேதத்தில் சான்றுகள் எதுவும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளன என்று இரா. மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார்.

ஆனால் பாழடைந்த நகரம் என்னும் (Mohenjadaro - City of Dead) பொருளுடைய மொஹஞ்சதாரோ என்னும் இச் சொல்லை வைத்துக் கொண்டு ஆரியர்களின் படையெடுப்பும், திராவிடர் அழிவும் பற்றி எண்ணத் தோன்றுகின்றது. படையெடுப்பால் ஏற்பட்ட அழிவாக அகழ்வாராய்ச்சியாளர் குறிப்பிடவில்லை. இது இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அழிவென்றே குறிப்பிடுகின்றார். மொஹஞ்சதாரோப் பகுதியை ஆராய்ந்த புதை பொருள் துறையில் டாக்டர். ஜெனறலாகவிருந்த சேர். ஜோன் மார்ஷல் (Sir John Marshall) Director - General of Archaeology in India என்பவர் அப்பகுதியில் இருந்த நாகரிகம் கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன் அதாவது வேதகாலத்துக்கு முற்பட்ட ஆரியரல்லாதவர்களின் நாகரிகம் என முதன் முதல் கூறினார்.

மேலும் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அறிஞர் குழு ஒன்று இப்பகுதிகளில் காணப்பெறும் எழுத்துக்களைப் பதினைந்து ஆண்டுகளாக ஆராய்ந்த பின்னர் இவ்வெழுத்துக்களும், இப்பகுதி நாகரிகமும் திராவிடருக்கே உரியவை என முடிவு செய்தது எனவும் அறிகிறோம்.

லெமூரியா அழிவுற்ற போது வெளியிடம் சென்ற ஆரியர்கள் மீண்டும் இந்தியாவில் நுழையும் போது அவர்கள் சில நம்பிக்கைகளுடன் வந்ததாகவும் அதில் தங்களை எதிர்கொள்ளும் இராட்சதர்கள் என்ற நம்பிக்கையே அவர்களுக்குப் பயத்தையுண்டாக்கியது என அறிகிறோம். இரவில் மட்டும் இயங்கும்

சக்தி பெற்ற இவர்கள் பல்வேறு மாயாஜால வித்தைகள் அறிந்தவர்களாகக் கருதப் பெற்றனர். சூரியஒளி தோன்றியவுடன் மறைந்து விடுவார்கள் என்றும் நம்பினர். எனவே அவர்களது பிரார்த்தனைகளில் பெரும்பாலும் அக்கினியும் இந்திரனும் இடம் பெற்றுள்ளனர்.

இருக்கு வேதத்தில் வரும் ஒரு பிரார்த்தனையாவது "அக்கினியே விரைந்து எழுவாயாக. எங்களை எதிர்ப்பவர்களை அழிக்க உனது ஆற்றலை எல்லாம் திரட்டுவாயாக, இராட்சதர்களுடைய கொடிய வில், அம்புகளையெல்லாம் அழித்து விடு" என்பதும் சாமவேதத்தின் படி இவர்கள் அனைத்துக் கலைகளும் அறிந்தவர்கள் என்றும் இவர்களை இலகுவில் வெல்ல முடியாதென்றும் ஆரியர்கள் அஞ்சினர்.

ஆரியர்களின் வரவு தென்னகத்தில் படிப்படியாக ஏற்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. விந்திய மலை வாசிகளை வென்று கடந்து வந்தனர் என்றும், இக்குழுவுக்கு அகத்தியர் தலைமை தாங்கினார் என்றும் கூறப்படுகின்றது. இதனையே அகத்தியர் விந்திய மலையை அடக்கியதாகக் கூறப்படும் கதையும் உருவகப்போக்கை உடையதேயாகும். அம் மலையில் வாழ்ந்தவர்களை வென்றார் என்பதே பொருள். இவரே தென்னகம் வந்த முதல் ஆரியர், அத்துடன் பதினெட்டுக் குடும்பங்களையும் தென்னகம் அழைத்து வந்தவர் என்பர்.

ஆங்கிலேயர் இந்தியாவுக்குள் நுழைந்து ஆட்சியைக் கைப்பற்றியது போலவே ஆரியரும் பல்வேறு உத்திகளை கையாண்ட பின்னர் தென்னகத்தில் நுழைய முடிந்தது என்பது பொருந்துமென இரா. மாணிக்கவாசகம் கூறுகின்றார். இவ்வாறான வரலாற்றுப் பிறழ்வுகளே காலப்போக்கில் இந்திய மருத்துவத்தில் ஆயுள்வேத மருத்துவம், சித்த மருத்துவம் என்னும் பிரிவுகள் ஏற்படக் காரணமாயிற்று.

# 6 தமிழ் மருத்துவக் கலை வரலாறும் சித்த, ஆயுள்வேத மருத்துவ முறைகளின் வளர்ச்சியும்.

தமிழ் மருத்துவக் கலை வரலாறு பற்றி அறிவதற்கு முன் உலக மருத்துவ வரலாறு பற்றி சுருக்கமாக அறிந்து கொள்வது அவசியமாகும். உலக மருத்துவ வரலாற்றை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்று சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த செல்வி நிரஞ்சனாதேவி தனது முனைவர் பட்ட ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளா்.

## 6.1 உலகின் மருத்துவ வளர்ச்சி
(Progress of Medicine in the World)

I - சீன மருத்துவம் - (கி.மு. 3000 மட்டில்)
II - எகிப்திய மருத்துவம் - (கி.மு. 3000 மட்டில்)
III - பபிலோனிய மருத்துவம் - (கி.மு. 3000 மட்டில்)
(மொசப்படோனியா நாகரிகம்)
IV - கிரேக்க மருத்துவம்
(அ) ஹிப்போகிறேற் (Hippocrates)
(ஆ) அரிஸ்டோட்டில் (Aristotle)
V - உரோமானிய மருத்துவம்.

இதனில் ஹிப்போகிறேற்றை (Hippocrates) மருத்துவத்தின் தந்தை என்பர் (Father of Medicine) என்பர்.

பண்டைய நாகரிகங்களுள் தம்முடைய தொன்மையறாது இன்று வரை நின்று நிலவுவன சிலவே. பிறவெல்லாம் அவ்வவ் காலங்களிலே அழிந்தும், பின் வந்த நாகரிகங்களின் கலப்பில் தம்மையிழந்து உருமாறியும் போயுள்ளன. அவ்அவ் நாகரிகங்களின் நிலைபேற்றுக்கும் அழிவிற்கும் ஏற்ப அவற்றின் மருத்துவ முறைகளின் வளர்ச்சியும் தேய்வும் அமைந்தன. இதற்குச் சான்றாகப் பண்டைய எகிப்து நாகரிகத்தின் மருத்துவ முறை அந் நாகரிகத்தின் அழிவில் தானும் முடிவுற்றது. கிரேக்க மருத்துவ முறை தம் நாகரிகத்தோடு

முடிவுறாது பின் வந்த உரோமானிய நாகரிகத்திலும் தொடர்ந்தது. அதன் பின் ஐரோப்பிய மற்றும் அராபிய நாகரிகங்களால் பின்பற்றப் பெற்று இன்று முறையே அலோபதி, யூனானி என்ற இரு பெரும் மருத்துவ முறைகளாக வளர்ந்து விளங்குகின்றன.

இனி மருத்துவ வரலாற்றில் தமிழ் மருத்துவக் கலை பற்றிக் கவனிப்போம்.

## 6.2 தமிழ் மருத்துவக் கலை வரலாறு

தமிழ் இலக்கியச் சான்றுகளின் படி தமிழ் மருத்துவ வளர்ச்சியை நான்கு படி நிலைகளில் பகுக்கலாம்.

I இயற்கைநெறிக்காலம் - (*சங்ககாலம்*)

II அறநூற்காலம் - (*சங்கம் மருவிய காலம்*)

III சித்தர் காலம் (*கி.பி. 5 - 18 ஆம் நூற்றாண்டு வரை*)

IV (அ) தமிழ் மருத்துவம் நலிவுற்ற காலம் (*19 ஆம் நூற்றாண்டு*)

(ஆ) தற்காலம் அறிவியற் காலம் (*20 ஆம் நூற்றாண்டு*)

### 6.2.1 இயற்கைநெறிக்காலம் (*சங்க காலம்*)

இதனை இயற்கையோடு இணைந்த காலம் எனலாம். தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய நூல்களில் காணப்படும்

மருத்துவக் குறிப்புக்கள் பெரிதும் இயற்கை மருத்துவம் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. சித்த மருத்துவத்தின் கருமூலங்கள் இந்நூல்களில் பரவலாகக் காணமுடிகின்றது.

தொல்காப்பியம் முதல் தமிழ் நூல் எனக் கணிக்கப்படுகின்ற தொல்காப்பியத்துக்கு முற்பட்ட தமிழ் நூல்கள் எதுவும் இதுவரை கிடைத்தில. எனினும் அவை இருந்தன என்பதற்குரிய சான்றுகளைத் தொல்காப்பியம், யாப்பருங்கலம் போன்ற நூல்கள் வழியாக அறிய முடிகின்றது எனக் குறிப்பிடுகின்றார் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள்.

தொல்காப்பியத்தின் காலத்தைத் திட்டவட்டமாகக் கணிக்கமுடியவில்லை. இருந்தும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரங்கேற்றப்பட்டதாக மு. வரதராசன் குறிப்பிடுகின்றார். ஏனையவர்களின் கூற்றுப்படியும் ஆராயும் போது கிட்டத்தட்ட இற்றைக்கு 2300 - 2500 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டது எனக் கொள்ளல் பொருத்தமாகும்.

## தொல்காப்பியத்தில் மருத்துவக் கலை பற்றிய குறிப்புக்கள்

மருத்துவம் பற்றி நேரடிக் குறிப்புக்கள் இல்லாவிட்டாலும், பல்வேறு மருந்துப் பொருட்கள் தமிழகத்திலிருந்து அயல் நாடுகட்கு ஏற்றுமதியாகின என்பன போன்ற குறிப்புக்கள் உள்ளன.

மறைந்த குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் மருத்துவக் கலையில் வல்லுனராகத் திகழ்ந்தனர் என்று பேராசிரியர் மதிவாணன் கருதுகிறார்.

தொல்காப்பியத்தில் சித்த மருத்துவத்தின் ஐம்பூதக் கொள்கை காணப்படுகின்றது. இதனை

"நிலம் தீ நீர்வளி விசும்போடைந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"
என வரும் வரிகள் மூலம் அறியலாம்.

## தொல்காப்பியத்தில் நோய், பிணி பற்றிய குறிப்புக்கள்

நோய் என்பதன் கருத்து - வருத்தம், துன்பம், நொய்ந்து போதல் - மனம் பலவீனம் அடைதல்

மனவருத்தத்தினை நோய் என்றும், உடல் வருத்தத்தினை பிணி என்றும், கூறுவதைக் அறிலாம்.

"நோய் மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந் தோளை"
- தொல் - அகத் . 39 -
"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இனி வரல் நான்கே"
- தொல் - மெய்ப் - 254

முதலிய வரிகள் சான்றுகளாகும்.

தொல்காப்பியத்தில் மருந்து என்ற சொல் காணப்பெறவில்லை. ஆயினும் அதனை "உறை" என்ற சொல்லால் தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார்.

"வாயுறை வாழ்த்தே விளங்க ஆராயின்
வேம்பினையும் கடுவினையும் போல
வெஞ் சொல்லடக்காது பிறபயக்குமென"
வா = வாய்மொழி
உறை = மருந்து (Medicine)

இளம்பூரணர் கருத்துப்படி தொல்காப்பிய காலத்தில் உறை எனும் சொல் மருந்து எனும் பொருளில் வழங்கிற்று எனலாம். மேற்குறிப்பட்ட பாடலில் வேம்பு மூலிகையும் பயன்படுத்தப்பட்டதெனவும் அறியலாம்.

இதேபோல் தேன் உபயோகிக்கப்பட்டதையும் தொல்காப்பிய காலத்தில் அறியலாம்.

"**தேனென்** கிளவி வல்லெழுந்தியையின் "

என்பது காண்க.

மேற்குறிப்பட்ட தொல்காப்பிய சான்றுகளைக் கொண்டு பார்க்கும் போது சங்க காலத்தில் சித்த மருத்துவத்துக்குரிய கரு மூலங்கள் ஏராளமாக இருந்தன என்பது தெளிவாகின்றது. இதன் அடிப்படையில் சித்த மருத்துவத்தின் தோற்றத்தினை கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கொள்வதில் தவறில்லை எனக் கருதலாம். (*சங்க காலம்*)

## தமிழ்ச் சங்கங்கள்

ஆதியில் மூன்று சங்கங்கள் தமிழை வளர்த்தன எனப்படும் அவை தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பன. இறையனார் களவியல் உரையிலே இச்சங்கங்களின் வரலாறு விளக்கப்படுகின்றது.

அதன்படி தெற்கே இருந்த மதுரையில் ஒரு சங்கமும் அதனைக் கடல் கொண்ட பின்னர் கபாடபுரத்தில் ஒரு சங்கமும் அதுவும் கடல் கொள்ளப்பட்டபின், இப்போதுள்ள மதுரையில் மூன்றாவது சங்கமும் கூடின என்பதும், மதுரையில் மூன்றாவது சங்கமும் கூடிய பின்னரே தெற்கே இருந்த மதுரையை தென்மதுரையென்றும் அங்கே கூடிய சங்கம் தலைச்சங்கம் என்றும், கபாடபுரத்திற் கூடியது இடைச்சங்கம் என்றும் இப்போதுள்ள மதுரை வடமதுரை, அங்கு கூடிய சங்கம் கடைச்சங்கம் எனவும் பெயர் பெற்றது.

கடல் கொள்ளப்பட்ட மதுரையிருந்த இடமே குமரிக் கண்டமென்றும் வழங்கலாயிற்று என முன்னர் காட்டப்பட்டது.

## முதல் சங்கம்

முதற்சங்கத்தில் 549 புலவர்கள் உறுப்பினராக இருந்தனர். அவர்களுள் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர் தலை நின்றார்கள் என்றும் முதற்சங்க காலத்திலேயே பரிபாடல், முதுநாரை, முதுகுருகு முதலியனவும், இலக்கண நூல் அகத்தியம் போன்றவை உருவாகின என்றும் கடுங்கோன் என்னும் பாண்டியன் காலத்தில் தென்மதுரையை கடல் கொண்டது எனவும் அறியலாம்.

## இடைச்சங்கம்

இரண்டாவது சங்கம் வெண்டேர்ச் செழியனால் கபாடபுரத்தில் (கபாடம் - வாயில்) 59 உறுப்பினர்களுடன் நிறுவியதாகவும் அவர்களுள் தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழியார், மோசியார், வெள்ளூர்க் காப்பியனார், சிறு பாண்டுரங்கனார், திரையன் மாறனார் முதலானோர் முதலிடம் பெற்றனர். மேற்கொண்ட இலக்கண நூல்கள் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் என்பன அச்சங்கம் மருவிய நூல்கள் என்றும் முடத்திருமாறன் காலத்தில் கபாடபுரமும் மூழ்கியது என்றும் கூறப்படுகின்றது.

## கடைச்சங்கம்

மூன்றாவது சங்கத்தை வட மதுரையில் 49 புலவர்களைக் கொண்டு நிறுவினார்கள். அவர்கள் அனைவர் பெயரும் திருவள்ளுவர் மாலையில் உள்ளது எனக் குறிப்புக்கள் உண்டு. புலவர்களுள் சிறுமாதேவியார், சேற்றம் பூதனார், அறிவுடையறனார், பெருங்குன்றூர்க்கிழார், இளம்திரமாறனார், மதுரையாசிரியர், நல்லத்துவனார், நக்கீரர் போன்றோர் முதலிடம் பெறுகின்றனர். நூல்களில் நெடுந்தொகை நானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து,

நூற்றைம்பது கவி, எழுபது பரிபாடல், கூத்து, வரிச்சிற்றிசை, பேரிசை என்பன முதன்மை பெறுகின்றன.

தலைச்சங்கம் 4400 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் இருந்தனவென்றும், மூன்று சங்கங்களின் காலம் 9990 ஆண்டுகள் இருந்தனவென்றும் இவற்றுக்கிடையில் இரண்டு கடல் கோள்கள் நிகழ்ந்தமையினாலே அவற்றின் இடையீடாக பலபல ஆண்டுகள் கழிந்திருக்கலாமென்றும் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட மூன்று சங்கங்களைத் தவிர வேறு சித்தர்களின் சங்கம் பற்றியும் சித்தர் பாடல்களில் குறிப்புகள் உண்டு. இச்சங்கம் முற்கூறிய மூன்றினில் மாறுபட்டு வேறாக இருக்குமோ என எண்ணவேண்டியுள்ளது. "பொதிகை மலையில் சங்கம் ஒன்று இருந்ததாகவும், சித்தர்கள் கூடி அகத்தியரது நூலை அரங்கேற்றம் செய்து குருப்பட்டம் வழங்கினர் எனவும் அகத்தியர் 12000 என்னும் நூல் குறிப்புகளில் வருவதையும் திரணாக்கியர் என்ற இயற் பெயருடைய தொல்காப்பியருக்கு நீங்காத தலை நோய் ஏற்பட 48 சங்கத்தாரும் சேர்ந்து வந்து அகத்தியரை அழைத்துச் சென்று தேரையரைத் துணையாக வைத்துக் கொண்டு மருத்துவம் செய்ததும் இந்நூலில் வருகிறது'' என்றும் குறிப்பிடுகின்றார் பேராசிரியர் இரா மாணிக்கவாசகம் அவர்கள்.

தென்மதுரை, கபாடபுரம் முதலிய இடங்களில் இருந்த சங்கம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை வளர்த்தது எனவும் பொதிகை மலையில் உள்ள சித்தர்கள் சங்கம் ஆன்மீகத்தையும் மருத்துவத்தையும் வளர்த்தது எனக் கொள்ளலாம்.

அடுத்து சங்கப் பாடல்களை ஆராய்ந்தால், மருத்துவனை அறவோன் என்று நற்றிணைப்பாடல் குறிக்கின்றது.

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்"

என வரும் வரிகள் சான்றாகும்.

பசிப்பிணியைப் போக்கும் உணவு அளிப்போரை பசிப்பிணி மருத்துவன் என்றும் அழைத்தனர்.

சங்க நூல்களில் மருத்துவக் கலை நிறைய இருந்தன என்பதைப் பண்பட்ட நாகரிகம் வாய்ந்த நூற்றுக்கணக்கான சங்க காலப் புலவர்களினால் இயற்றப்பட்ட பல நூறு பாடல்களின் தொகுப்பான “பத்துப் பாட்டு எட்டுத் தொகை” எனும் சங்க நூல்களில் காணலாம். இவற்றின் காலத்தினைக் கி.பி. 300 க்கு முற்பட்டதென அறிஞர் குறிப்பிடுவர்.

## சங்கநூல்களில் சில நோய்களின் பெயர்களும் அதற்கான மருத்துவக் குறிப்புக்களும்

காமநோய் - இந்நோய் உடையவர்கள் உணவு போதியளவு எடுக்காமையால் கண்கள், தோள், நெற்றி ஆகிய இடங்களில் நிறம் மாறுபட்டு வெளிறி இரத்தசோகை போல் காணப்படுவர். இதனைப் “பசலை” எனக் குறிப்பர்.

இதனைவிடத் தேமல் என்ற நோய் பற்றியும் இதுவும் இளம் பெண்களுக்கு ஏற்பட்டதாகவும், காதல் வயப்படும் மகளிரைப் பாதித்ததாகவும் இதனைச் “சுணங்கு”, “மாமை” எனப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர் எனவும் அறிகிறோம்.

இதைத்தவிர, கருவுற்ற மகளிர்க்கு வரும் வயாநோயைக் (வேட்கைநோய்) குறிப்பிட்டுள்ளனர். புளிப்புச் சுவை புளியங்காய், மண் போன்றவற்றை விரும்பி உண்பர். மகவு ஈன்ற பின் வெண்கடுகை அரைத்து நெய்யுடன் கலந்து உடம்பில் பூசிக் கொள்வர். கருச்சிதைவு அக்காலத்திலும் மிகப் பெரிய பாவமாகக் கருதப்பட்டது. பச்சிலை மருந்தால் நோய் பலவற்றை வியக்கத்தக்க முறையில் நீக்கி வரும் இனம் திராவிட இனம் என்று குறிப்பிடுகின்றார் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்.

கருநெல்லி போன்ற கனிகள் சாவை நீக்கும் கற்ப

மருந்தாகக் கூறப்பட்டிருப்பதைச் சங்க நூல்களில் காணலாம். அதிகாய சித்தி தரும் மூலிகைகளில் ஒன்றுதான் கருநெல்லி. கருநெல்லியென்பது மலை மூலிகையாகும். அகத்தியர் பரிபூரணம் 1200 எனும் நூலில் உள்ளது. இதைவிடக் கருநெல்லி பற்றி

அகநானூறு
புறநானூறு
நற்றினை
குறுந்தொகை
சிறு பாணாற்றுப்படை

முதலிய இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

புறநானூற்றில் வரும் ஔவையார் பாடல் கருநெல்லியைக் குறிப்பிடுகிறது.

"பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே"

என வரும் பாடலில் நெல்லி பற்றிக் கூறப்பட்டுள்ள குறிப்புக்கள் சித்தர்கள் கூறும் கருநெல்லி பற்றிய குறிப்புக்களுடன் பெரிதும் பொருந்துகின்ற குறிப்பாக மலை மூலிகை, சிறுஇலை, தீங்கனி, சாதல் நீங்க எனும் கருத்துக்கள் புறநானூற்றிலும் சிறுபாணாற்றுப்படையிலும் குறிக்கப்பட்டுள்ளன. எனவே இவை குறிப்பிடும் நெல்லி கருநெல்லி எனக் கூறலாம். ஏனைய சங்க இலக்கியப் பாடல்களில் வரும் நெல்லி பற்றிய செய்திகள் பெருநெல்லியைக் குறிப்பதாகும். இது பெரும்பாலும் பாலை நிலத்தில் வளரக் கூடியது. எளிதில் கிடைக்கக் கூடியது.

சங்க நூல்களில் மூங்கில் குருத்து கருவை அழிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தாவரவியல் பேராசிரியர் இரா குமாரசுவாமி தனது நூலில் இவ்வாறு கூறுகின்றார்.

"சூல் முற்றிய யானையின் கருவை யழிக்கும்
குணமுடையது மூங்கில் முளை"

இப்பாடலில் சொல்லப்படும் மூங்கில் கொழுந்து கருச்சிதைவை உண்டாக்குகின்றன என்பதை யானையிடமிருந்து கற்றுக் கொள்கிறோம் என்றும் இதனை இன்று நவீன மருத்துவம் தனது ஆய்வு மூலம் மூங்கில் கொழுந்தில் ஒரு வகை அமிலம் இருப்பதாகவும் அது கருவை அழிக்கும் திறனுடையது என்றும் விபரிக்கின்றார்.

இத்துடன் சித்தமருத்துவப் பாடநூலான பொருட் பண்பு நூலிலும் மூங்கில் குருத்து சூதகமுண்டாக்கிச் (ருதுவுண்டாக்கி) செய்கையுண்டென முருகேசு முதலியார் குறிப்படுகின்றார். இதைவிட பரம்பரை நாட்டு மருத்துவர்கள் மூங்கில் குருத்தைத் தீட்டு உடைக்கும் குடிநீரில் உபயோகிப்பதைக் காணலாம்.

சங்க காலத்தில் நிலங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். அங்கு வாழும் மக்களின் நெறிமுறைக்கேற்ப வகைப்படுத்தி அங்கு வளர்ந்த மூலிகைகளின் பெயரையே வழங்கி வந்தனர். அத்துடன் அவற்றுக்குரிய கடவுள்களையும் வகுத்துக் கூறியுள்ளனர். கடலும் கடல் சார்ந்த இடத்தில் நிகழும் வாழ்க்கை முறைக்கு இந்நிலத்தில் மூலிகைக் கருவாக வழங்கும் நெய்தலின் (Water Hyacinth) பெயரையும், வயலும் வயல் சார்ந்த இடத்திலுள்ள வாழ்க்கை முறைக்கு மணிமருத (Lagestroemia Flosregioa) மலரின் பெயரையும், காடு சார்ந்த ஒழுக்க முறைக்கு முல்லையின் (Jasmine) பெயரையும் மலை சார்ந்த ஒழுக்க முறைக்கு குறிஞ்சிச் செடியின் (Stronbilanthus) பெயரையும் வழங்கியுள்ளனர். முல்லையும் குறிஞ்சியும் சூரியன் வெண்மையால் மாறி வறட்சி எய்தி பாலை தோன்றுமென்பர். இதனைப் பால்மிகுந்த வெட்பாலை (Wrightia Tinctoria) மரத்தின் பெயரால் வழங்கியுள்ளனர். ஒவ்வொரு திணைக்கும் ஒரு மரத்தையும், கொடியையும், மலரையும் சிறந்த மூலிகைகளாக குறித்துள்ள நம் முன்னோர்கள் இத்திணைக்குரிய சிறப்பான பறவை, விலங்கு மனிதர்கள் அவர்தம் தொழில், ஒழுக்கம்,

கடவுள் போன்ற செய்திகளையும் குறித்துள்ளனர் எனத் தாவரவியல் ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

மேற்குறிப்பட்ட ஐந்திணை நிலங்களின் கடவுளாரையும், நோய்களையும் கீழ் வரும் அட்டவணையில் பார்க்கலாம்.

| | தெய்வம் | நிலம் | நோய் |
|---|---|---|---|
| 1 | திருமால் | முல்லை (காடு) | அழல் நோய் (பித்தம்) |
| 2. | முருகன் | குறிஞ்சி (மலை, குன்று) | ஐயநோய் (கபம்) |
| 3. | இந்திரன் | மருதம் (வயல், ஆற்றங்கரை) | வளி,அழல், ஐயநோய் (வாத, பித்த, கபம்) |
| 4. | வருணன் | நெய்தல் (கடல் சார்ந்த பகுதி) | வளி நோய் (வாதம்) |
| 5. | கொற்றவை | பாலை (வரண்ட மணற்காடு) | உயிர் வாழ்தல் கடினம் |

சங்கநூல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட செடி, கொடி, மரங்கள் பற்றிய செய்திகள் உள்ளன.

சுக்கு, சீந்தில், திற்பலியின் மருத்துவ இயல்பை மருத்துவன் தாமோதரனார், திருவள்ளுவர் மாலையில் விவரிக்கின்றார்.

"சீந்தில் நீர் கண்டம் தெறி சுக்கு தேனழாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்து இல"

மேற்கூறிய அனைத்தும் பழந்தமிழகத்தில் மருத்துவக் கருமூலங்கள் இருந்தமைக்கு நல்ல சான்றாகவுள்ளன.

## 6.2.2 அறநூற்காலம் (*சங்கம் மருவிய காலம்* )

இதனை மாறுதல் அடைந்த காலம் எனவும் கூறலாம் தொல்காப்பியர் காலத்தில் சித்த மருத்துவம் கருவாகி சங்க காலத்திலேயே உருப்பெற்று, சங்கம் மருவிய காலத்தில் புதுப்பொலிவு பெற்றது எனலாம். பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் தோன்றியகாலத்தினை சங்கம் மருவிய காலம் என்று குறிப்பர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் பல்வேறு மருத்துவக்குறிப்புகள் அக்காலத் தமிழ் மருத்துவக்கலையில் ஏற்பட்ட பல மாறுதல்களைக் குறிக்கின்றன. திருவள்ளுவரின் மருந்து அதிகாரம் தமிழ் மருத்துவக்கலை பெற்றிருந்த கட்டுக்கோப்பான நிலமையை விளக்குகின்றது. வள்ளுவர் கூறும் (மிகினும் குறையினும்) என்ற குறள் சித்த மருத்துவத்தின் அடிநாதமான உயிர் தாதுவாகிய வளி, அழல், ஐயம் என்பவற்றைத் தொட்டுக்காட்டுவது. இது சித்த மருத்துவத்தின் உச்ச நிலைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

சங்கம் மருவிய காலத்தை தமிழக வரலாற்றில் நிலை மாறுதல் காலம் (Transition Period) எனலாம். இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தவர்கள் சங்க கால மக்கள் எனில் இயற்கையிலிருந்து விலகி வாழத்தலைப்பட்டவர்களைச் சங்கம் மருவிய கால மக்கள் எனக் குறிப்பிடலாம். இதற்குக்காரணம் பௌத்த, சமண சமய எழுச்சியாகும். சமணர்கள் அளித்த நால்வகைத் தானங்களே இதற்குக்காரணம்.

1. உணவு 2. அடைக்கலம் 3. மருந்து 4. கல்வி

இதனால் சங்கம் மருவிய காலத்தில் மருத்துவக்கலை பெரிய மாறுதல்களைக் கண்டது.

சங்ககாலத்தில் சிலரிடம் தொழிலாக இருந்து வந்த மருத்துவக்கலை சங்கம் மருவிய காலத்தில் பலரிடம் தொண்டாக

மாறியது. சங்ககாலத்தில் தனி மனித நலனுக்காகப் பயன்படுத்தப்பட்ட மருத்துவம் சங்கமருவிய காலத்தில் சமூக நலனுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனை வலுப்படுத்தும் மிகுதியான சான்றுகளைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணலாம்.

## பதினெண் கீழ்க் கணக்கு நூற்களில் சிலவற்றின் விபரமும் சிறப்பும்

| | | |
|---|---|---|
| நாலடியார் | - இயற்றியவர் | - சமண முனிவர் |
| திருக்குறள் | - இயற்றியவர் | - திருவள்ளுவர் |
| திரிகடுகம்- | இயற்றியவர் | - நல்லாதனார் |
| ஆசாரக்கோவை | - இயற்றியவர் | - பெருவாயில் முள்ளியார் |
| சிறுபஞ்சமூலம் | - இயற்றியவர் | - காரியாசன் |
| ஏலாதி | - இயற்றியவர் | - கனிமேதாவியார் |

## திருக்குறள்

தமிழ் இலக்கியத்துக்கு மணிமகுடமாக விளங்கும் இந்நூலில் "**மருந்து**" எனும் ஓர் அதிகாரம் அமைந்துள்ளது. ஆனால் பிணி தீர்க்கும் மருந்துகள் செய்முறைகளில் சிறிதேனும் குறிப்பிடாமை வியப்புக்கும் ஆய்வுக்குமுரியது. இவ்வதிகாரத்தில் முதல் குறளில் உயிர்த்தாதுவாகிய மூன்றும் (வளி, அழல், ஐயம்) குறிப்பிட்டு நோய் உண்டாக்குதற்குரிய காரணங்களைக் கூறியுள்ளமை சித்த மருத்துவ தத்துவங்களை வெளிப்படுத்துவதாகும். அடுத்து வரும் ஆறு குறள்களிலும் நோய் வராமல் தடுக்கும் உணவு நெறிகளைக் குறிக்கின்றது. இறுதி மூன்று குறள்களும் நோய் ஏற்படும் போது மருத்துவர் மேற்கொள்ள வேண்டிய நெறி முறைகளைக் குறிக்கின்றன.

## திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி எனும் மூன்று மருந்துச் சரக்குகளின் கூட்டையே திரிகடுகு எனலாம். இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலிலும் மூன்று பொருள்கள் அடங்கும். இது உள நோயாகிய அறியாமையைப் போக்கி இன்பம் நல்கும் என்று குறிக்கின்றார் இந்நூல் ஆசிரியர்.

சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திரிகடுகம் எனக் குறிக்கப்படும் மருந்துச் சரக்கு இன்றும் சித்த மருத்துவத்தின் துணை மருந்தாகப் பயன்படுகின்றது. இம்மருந்தின் பழமையையும் காலம் கடந்துவாழும் திறனையும் இந்நூல் உணர்த்துகின்றது. எடுத்துக்காட்டாக ஆறுமுக செந்தூரத்துக்கு துணை மருந்தாக திரிகடுகுச் சூரணம் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

## ஆசாரக்கோவை

இந் நூற்பெயர் மருந்தின் பெயராக அமையாவிட்டாலும் நல்வாழ்வுக் கோட்பாட்டினை வலியுறுத்தும் ஆசாரம் என்னும் சொல்லால் அமைந்துள்ளது. ஆசாரம் என்பதற்கு தூய்மை எனப் பொருள்படும்.

## சிறுபஞ்சமூலம்

சித்த மருத்துவ நூல்களில் பெரும்பஞ்ச மூலம், சிறுபஞ்சமூலம் என இருவகையுண்டு.

பெரும்பஞ்ச மூலம் - வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை

சிறுபஞ்சமூலம் - கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிற்றாமல்லி, பேராமல்லி, நெருஞ்சில்

என்பன.

இது பற்றி டாக்டர் க.வெங்கடேசன் தனது ஆய்வேட்டில் பின்வருமாறு குறித்துள்ளார்.

“சிறிய வழுதுணை வேர் சிறுநெருஞ்சி மூலம்
சிறுமலி கண்டங்கத்தரி வேர் நறிய
பெருமல்லி ஓர் ஐந்தும் பேசு பலநோய் தீர்க்கும்
அரிய சிறு பஞ்ச மூலம்”

சிறு பஞ்ச மூலம் - கண்டங்கத்தரி, சிறுவழுதுணை சிற்றாமல்லி, பேராமல்லி, நெருஞ்சி என்பவற்றின் வேராகும்.

முதலாவது பதார்த்தகுண சிந்தாமணியிலும் இரண்டாவது பொருள்தொகை நிகண்டிலும் காணப்படுகின்றது. உடல் நலம் காப்பது போல் சிறு பஞ்சமூலம் பாடல்களில் குறிக்கும் ஐந்து கருத்துக்களும் உயிர் நலம் பேணி வீடு பேற்றினை அடைய வழி செய்யும் என்பர் இந்நூலை இயற்றிய காரியாசன் எனும் புலவர். இதற்கு எடுத்துக்காட்டாக

“பூவாத கன்னியையும், பூப்பு தவிர்ந்த முதுப்
பெண்டிரையும், தவப் பெண்டீரையும்
வேசியையும், பிறர் மனையாளையும்
புணர்தல் கூடாது”

- சிறு பஞ்சமூலம் - 42

## ஏலாதி

நோய் தீர்க்கும் சரக்குகளில் ஏலத்தை முக்கிய சரக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் சூரணத்தை ஏலாதிச் சூரணம் என்பர் மருத்துவர். இதனில் ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, மிளகு, திற்பலி, சுக்கு ஆகிய ஆறு சரக்குகளும் சேருகின்றன. இது உடம்புக்கு நலம் தருவது. இதேபோல் இந்த நூலில் வரும் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பட்ட ஆறு பொருளும் அறிவுக்கு நன்மை தரும் என்பதால் ஏலாதி எனப் பெயர் பெற்றது. இம்மருந்து இக்காலத்திலும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுவது ஈண்டுக்

குறிப்பிடத்தக்கதாகும். ஏலாதிச் சூரணம் பற்றி சித்த வைத்தியத் திரட்டில் ஏழு சரக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலே கூறியவற்றுடன் தற்போது கூகைநீறும் சேர்க்கப்பட்டு ஏழு சரக்குகளாக உள்ளது. இதனிலிருந்து பண்டைக் காலத்தில் ஆறு சரக்காகவும், பிற்காலத்தில் ஏழு சரக்குகளாக கூகை நீறும் சேர்க்கப்பட்டிருக்கலாமென்று எண்ண இடமுண்டு. அல்லது கூகைநீறை ஒரு சரக்காக கருதவில்லை எனவும் கூறலாம்.

மேற்குறிப்பிட்ட ஐந்து நூல்களும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் மருத்துவக்கலை பற்றி நேரடிக்குறிப்புகளைத் தருகின்றன.

சங்க இலக்கியத்தில் உள்ள அசைவ உணவு சங்கம் மருவிய காலத்தில் சைவ உணவாக மாறியது. இதற்குக்காரணம் பௌத்த சமணர்களின் போதனை என்று கூறலாம்.

**உணவு நெறி பற்றிப பிற நூல்களில் கூறப்பட்டுள்ளதைக் காண்போம்.**

பதங்கெட்ட உணவை உண்ணக்கூடாது
(நான்மணி - 15ம் பக்கம்)
உண்டவுடன் வாய் கழுவ வேண்டும்
(நான்மணி - 36ம் பக்கம்)
பிணியுள்ள உடம்பில் உணவு செரியாது
(நான்மணி - 52ம் பக்கம்)
உண்பதற்கு முன் நீராடுதல் வேண்டும்.
(திரிகடுகம் - 27ம் பக்கம்)
உணவு அதிகமாக விரும்பினோர்க்கு எளிதில் பிணிவரும்
(முது. காஞ்சி, எளியபத்து - 7)

மேற்குறிப்பிட்டவற்றில் இறுதியான கருத்தை "மருந்து" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவரும் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

“இழிவறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும்
கழி பேரிரையான் கண் நோய்”

இதனிலிருந்து பெரிய அளவு உணவை உண்பதால் நோய் உண்டாகும் என்பது தெளிவு.

இது பற்றி நவீன மருத்துவத்தில் எடுத்துக்காட்டாக நீரிழிவு நோய் (Diabetes Mellitus) ஏற்படுவதற்கு சிறிது முற்பட்ட காலத்தில் அதிகளவு உணவை விரும்பி உண்பான் என்றும் அதனை (Pre - Diabetic Symptom) எனவும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

உணவில் தூய்மை வேண்டும்.

(ஏலாதி - 41, 42 பக்கங்கள்)

இனிப்புச் சேர்ந்த கறியெல்லாம் முதலாவதாகவும் மற்றைய சுவையுள்ள கறிகளை இடையாகவும், கைப்புச் சுவையுள்ள கறிகளை இறுதியாகவும் உண்ண வேண்டும்.

(ஆசாரக்கோவை பக்கம் 25)

இவ்வாறு உணவு நெறிகள் அக்காலத்தில் வலியுறுத்தப்பட்டன என அறிகின்றோம்.

பழக்க வழக்கங்கள் பற்றிப் பார்க்கும் போது சங்கம் மருவிய காலத்தில் பல சிறப்பம்சங்கள் இடம் பெறுகின்றன. இவற்றுக்கு எடுத்துக்காட்டாக

வைகறையில் துயில் எழுதல்

(ஆசாரக்கோவை 4ம் பக்கம்)

மாலையில் உறங்காமை

(ஆசாரக்கோவை 29ம் பக்கம்)

பூப்பு நிகழ்ந்தால் மூன்று நாட்கள் மெய்யுறலாகாது. நீராடிய

பின்பு பன்னிரண்டு நாளும் உறைதல் வேண்டும்.
(ஆசாரக்கோவை 42ம் பக்கம்)

பிறரைப்பார்த்து உடம்பு நன்றாக இருக்கின்றது என்று சொல்லுதல் தீயொழுக்கம் என்று கூறப்படுகின்றது.
(ஆசாரக்கோவை 59ம் பக்கம்)

மேற்கூறிய அனைத்தும் நல்வாழ்வுக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்றன.

### 6.2.3 சித்தர் காலம் (*கி.பி 5 முதல் 18ம் நூற்றாண்டுவரை*)

தமிழ் மருத்துவக்கலையின் பொற்காலம் சித்தர் காலமாகும். பண்டைய காலத்தில் தமிழர்களின் பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்திருந்த திராவிட மருத்துவம் கி.பி 5 - 18 நூற்றாண்டு வரை வாழ்ந்த பதினெண் சித்தர்களின் அரவணைப்பில் புதுப்பொலிவுடன் சித்த மருத்துவம் என்ற பெயருடன் உச்ச நிலையில் இருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. கிடைக்கின்ற இலக்கிய சான்றின் படி திருமூலரின் “திருமந்திரம் 3000” எனும் நூலே சித்த தத்துவக் கருத்துக்களை நேரடியாக விளக்கும் முதல் நூலாகும். “திருமூலர் 8000” என்னும் நூல் நிறைய மருத்துவக்கருத்துக்களை அடக்கியுள்ளதாக பேசப்படுகின்றது. ஆனால் இந்நூலைப்பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே திருமூலரைச் சித்த மருத்துவத்தின் தந்தையாகக் கருதலாம்.

## 6.2.4 (அ) தமிழ் மருத்துவம் நலிவுற்ற காலம் *(19ம் நூற்றாண்டு)*

18ஆம் நூற்றாண்டுக்குப் பின் அயல் மருத்துவ முறைகளான அலோபதி மருத்துவ முறை வளர்ச்சியடைந்தமையாலும் இந்தியா, இலங்கை நாடுகள் அன்னியர் ஆட்சியின் கீழ் இருந்தமையாலும் சுதேச மருத்துவப்பயன்பாடு நாட்டுப்புறங்களில் மட்டும் ஒதுங்கி விட்டன எனலாம். நாட்டை ஆண்டவர்கள் நகர்ப்புறங்களில் நவீன மருத்துவமனைகளை அமைத்தமையாலும் மக்கள் மத்தியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. இவ்விடத்தில் இலங்கையில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை குறிப்பிட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் என்ற இடத்தில் அமெரிக்கன் மிசன் ஸ்தாபனத்தால் ஒரு மருத்துவமனை நிறுவப் பெற்றது. அங்கு மனிதர்களுக்கும், ஆடு, மாடு போன்ற பிராணிகளுக்கும் மருத்துவம் பார்க்கப்பட்டது.

ஆரம்பத்தில் அங்குள்ள மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்குச் சுதேச மருத்துவர்களிடமும், தங்களின் வீட்டு மிருகங்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு புதிதாக ஆரம்பித்த மிசன் மருத்துவ மனையில் மருத்துவம் பெற்றனர். இதனால் இந்த மிசன் மருத்துவமனை மிருகங்களுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவமனையாகவே ஆரம்பத்தில் இருந்தது. அதேசமயம் மத மாற்றமும் மருத்துவ சேவையின் கீழ் நடைபெற்று வந்தது. இவ்வேளையில் கிரீன் தந்தை (Green Father) மானிப்பாயைச் சுற்றியுள்ள சுதேச மருத்துவர்களை அழைத்து நவீன முறையில் மருத்துவக்கலையைப் போதிக்க ஆரம்பித்தார். கட்டு வைத்தியம், இரண வைத்தியம் போன்றவற்றையே முதலில் கையாண்டார். இதனால் உடலியற் பாடத்தைத் (Anatomy) தமிழில் மொழி பெயர்த்தார். கிறீன் தந்தையின் இந்நூல் அங்காதி பாகம் என்னும் பெயரில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. உலகின் மனித உடம்பு பற்றி (Anatomy) முதன் முதல் 1872 ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ் நூல் இதுவேயாகும். இந்த வகையில் நவீன மருத்துவப் பக்கம் மக்கள் கவரப்பட்டனர்.

இவ்வாறு இந்தியாவிலும், இலங்கையிலும் அலோபதி மருத்துவம் பரவி வளரத் தொடங்கியதுடன் ஆட்சியாளர்களின் அரவணைப்பும் அலோபதி மருத்துவத்துக்கு கிடைத்துள்ளமையால் சித்த மருத்துவத்தின் வளர்ச்சி தேக்கமடைந்தது எனலாம்.

இதனால் சித்த மருத்துவம் நாட்டுப்புறங்களில் உள்ள சுதேச மருத்துவர்களால் பாதுகாத்து வளர்த்து வரப்பட்டன. இதன் பேறாக இந்த மருத்துவக் கருத்துக்களும், மருந்துகளும் நாட்டுப்புறப்பாடல்களாகவும் பழமொழிகளாகவும் உருமாறினதெனலாம். இதனால் நாட்டுப்புற மருத்துவம் எனும் பெயர் வழங்கலாயிற்று.

"நாட்டுப்புற மருத்துவம்" எனும் போது ஒரு ஐயம் எழக்கூடும் பாமரர்களால் பலகாலமும் பரம்பரை பரம்பரையான முறையில் செவிவழியே கேள்விச் செல்வமாக வழங்கிய மருத்துவ முறையே நாட்டுப்புற மருத்துவம் என நினைத்தல் கூடும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இக்கருத்து சங்க காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமே பொருந்தும். மாறுதல் காலமாகிய கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு, நெறிமுறையாக மருத்துவக்கலை மாறுதலடைந்து, அதற்குப்பின் சித்தர்களால் 18ம் நூற்றாண்டுவரை நல்ல முறையில் வளர்க்கப்பட்டதாலும், சித்தர்கள் பெரும்பாலும் நாட்டுப்புறங்களில் வாழ்ந்து அம்மக்களின் பேச்சு மொழியிலே அவர்கட்கு ஏற்ற வகையில் மருந்து முறைகளை கற்பித்தும் வந்துள்ளனர். தற்காலத்தில் நாட்டுப்புறங்களில் நிலவும் மருந்து முறைகளில் பெரும்பான்மை சித்த மருத்துவ நூல்களில் காணப்படுபவையாகும். இவற்றின் வடிவங்கள் நாட்டுப்புற இலக்கிய வகையைச் சார்ந்தவையே தவிர இவற்றைப் படைத்தவர்கள் சித்தர்களேயாவார். இன்று பாட்டி வைத்தியம், நாட்டு வைத்தியம் என்று குறிக்கப்பெறும் அனைத்துக்கும் மூலமாக அமைந்தவை பதினெண் சித்தர்களின் மருத்துவச் சிந்தனையேயாகும்.

Dr.P.Ramanathan
D.A.M.S.(Cey.),M.D.(India),Ph.D.(S.L.)
Paramu Siddha Medical Centre
Thavady Suthumalai Road, Thavady, Kokuvil.

## 6.2.4 (ஆ) தற்காலம் - அறிவியல் காலம்
### *(20 ஆம் நூற்றாண்டு)*

நாட்டுப்புறங்களில் ஒதுங்கிய சித்த மருத்துவம், நாட்டின் சுதந்திர விடுதலைக்குப் பின் மீண்டும் எழுச்சி பெற முனைந்தது. இந்த மருத்துவ முறையைக் கட்டிக்காத்த பல சித்த மருத்துவ பரம்பரைகள், காலத்துக்கு ஏற்ப மாறுதல்களை ஏற்கவோ, செய்யவோ முயலாமையால் விரிவான எழுச்சி பெற இயலாமற் போயிற்று. அறிவியல் மருத்துவ முறை மின்னல் வேக வளர்ச்சியில் மக்களும், ஆட்சியாளர்களும் மிகுந்த ஈடுபாடு கொண்டதால் தமிழகத்தில் 1965 வரை சித்த மருத்துவம் சீரான வளர்ச்சியைப் பெறவில்லையென டாக்டர் வெங்கடேசன் குறிப்பிடுகின்றார். 1968ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களால் நடத்தப் பெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மகாநாட்டின் வாயிலாகச் சித்த மருத்துவம் உலகப்பார்வையினைத் தன்பால் ஈர்த்தது. இதேபோல் இலங்கையிலும் மறைந்த பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் (S.W.R.D.Bandranayajka) சுதேச மருத்துவத்துக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தினார். இதன் பயனாக 1961ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு கட்டுக்கோப்பான ஆயுள்வேதச் சட்டத்தினைக் கொண்டுவந்து நிறைவேற்றி, ஆயுள்வேத மருத்துவத்தின் கீழ் சித்த மருத்துவம் ஒரு பிரிவாகக் கணித்து வளரலாயிற்று. அது இன்று உயர் கல்வி அமைச்சின் கீழ் பல்கலைக்கழக அந்தஸ்துப் பெற்று இருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

இந்த வகையில் அறிவியல் அடிப்படையாக வளர்ந்து வரும் சித்த மருத்துவம் தமிழ்நாட்டில் உயர்நிலையில் இருப்பது போற்றத்தக்கது.

## 6.3 சித்த ஆயுள்வேத மருத்துவ முறைகளின் வளர்ச்சி

இந்தியாவில் வடநாட்டாரின் சுதேச மருத்துவம் ஆயுள்வேத மருத்துவமென்றும், தென்நாட்டவரின் சுதேச மருத்துவம் சித்த மருத்துவமென்றும் பொதுவாக கூறுவர். இதேபோல் இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளாகிய தமிழ் மக்களின் சுதேச மருத்துவம் சித்த மருத்துவமென்றும், தென்பகுதி பெரும்பான்மைச் சிங்கள மக்களின் சுதேச மருத்துவம் ஆயுள்வேத மருத்துவமென்றும் கூறுவது வழக்காகவுள்ளது. சித்த மருத்துவமும் ஆயுள்வேத மருத்துவமும் இரண்டும் இந்திய மருத்துவத்தின் இருகண்கள் என்று கூறலாம். இரு மருத்துவ முறைகளும் இந்தியக் கண்டத்தில் பண்டு தொட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளன. சித்த மருத்துவத்தின் மூல நூல்கள் தமிழ் மொழியிலும் ஆயுள்வேத மருத்துவத்தின் மூல நூல்கள் சமஸ்கிருத மொழியிலும் பெரும்பாலும் காணப்படுகின்றன. வடமொழியும் (சமஸ்கிருதம்) தமிழ் மொழியும் இணைந்து எப்படி புது ஆக்கங்கள் பெற்றனவோ அதேபோல் சித்த மருத்துவமும் ஆயுள்வேத மருத்துவமும் சேர்ந்து சித்தாயுள்வேத மருத்துவமென்று புதிய பரிமாணங்களை உருவாக்கியுள்ளன என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் இந்தியாவில் இவ்விரு மருத்துவ முறைகளும் தனித்தனி வளர்ச்சியடைந்துள்ளமை போல் இலங்கையில் வளர்ச்சியுறாது இருப்பது நோக்கற்பாலது. இதற்குக்காரணம் அரசின் ஆதரவில் ஆயுள்வேதம் வளர்ச்சியுறுவதும், பரம்பரை வைத்தியர்களால் மட்டும் சித்த மருத்துவம் பாதுகாக்கப்பட்டு வருவதும் ஒரு காரணமாகலாம். சுருங்கக்கூறின், யாழ்ப்பாணத்தில் உள்ள சுதேச மருத்துவர்கள் தங்களை சித்த வைத்தியர் எனக் குறிப்பிடுவதும் சித்த மருத்துவத்துக்கென சிறப்பம்சம் பெற்ற பற்ப செந்தூரங்களை உபயோகித்து வருவதையும் இன்றும் காணலாம். ஆனால் தனிப்பட்ட மருத்துவர்களை தவிர்ந்த அரசு மருத்துவமனை மருத்துவர்கள் இத்தகைய சிறப்பு மருந்துகளை உபயோகிக்க வாய்ப்பு இல்லாமல் ஆயுள்வேத மருந்துகளில் பெரும்பான்மையான அரிஷ்ட ஆசவங்கள் போன்றவற்றை உபயோகிக்கவேண்டிய நிலையில் இருப்பதையும் கவனிக்கலாம். இதனால் படிப்படியாக சித்த மருத்துவர்கள் தங்களது தனித்துவத்தை கைவிட்டு இந்தியாவில்

"சித்தாயுள்வேத" என்ற பாணியில் மாறி வருவதும் நோக்கத்தக்கது. அத்துடன் அரிய சித்த மருந்துகளின் உபயோகம் படிப்படியாக அற்றுப்போகும் நிலையும் உருவாகின்றது.

பழம் திராவிட மருத்துவத்திலிருந்து பிறந்தவையே ஆயுள்வேதமும் சித்தமருத்துவமும் ஆகும். சித்தமருத்துவம் என்ற பெயர் சித்தர்களால் போற்றி வளர்க்கப்பட்ட மருத்துவம் எனப்பொருள்படும். "பதினெண் சித்தர்கள்தான் நம் நாட்டில் சித்த வைத்திய முறையை முதலில் கண்டவர்கள் என்று கூற முடியாது" இவர்களுக்கு முன்பே வைத்திய முறை வளர்ந்திருக்கின்றது.

அந்த வகையில் ஆயுள்வேதம் சரக்தர், சுசுரதர், ஆத்திரேயர் முதலானோரால் தோற்றுவிக்கப்பட்டது. அது தோன்றிய காலம் கி.மு ஐந்தாம் நூற்றாண்டென்பர் டாக்டர் பி.குடும்பையா. சங்கம் மருவிய காலத்தின் பிற்பகுதியில் ஆயுள்வேத மருத்துவ முறைகள் தமிழகத்திலும் வழக்கிலிருந்தது என டாக்டர் வெங்கடேசன் குறிப்பிடுகின்றார். எனவே புராதன திராவிட மருத்துவ முறையானது குமரிக்கண்டம் மறைந்த பின்பு தமிழகத்தில் பொதுவாகவும் வடநாட்டிலே வேதகாலம் முதல் சிறப்பாகவும் வளர்ந்து வந்ததை இருக்கு வேத காலம் முதல் அவதானிக்க முடிகிறது. ஆரியர் வரலாற்றில் இருக்கு முதலான நான்கு வேதங்களோடு ஆயுள்வேதமும் சேர்ந்து ஐந்தாவது வேதமாகக் கொள்ளப்படுகின்றது. இருக்கு, அதர்வ வேதங்களில் காணக்கிடைக்கும் மருத்துவக் குறிப்புக்கள் ஆயுள்வேதத்துக்கு முன்னோடியாக விளங்குகின்றது. அவ்வகையில் ஆயுள்வேதம் வேதகாலத்தை ஆரம்பமாகக் கொண்டு தொடர்ச்சியான வரலாற்றைப் பெற்று விளங்குதைப்போல் சித்த மருத்துவத்தின் வரலாறு தமிழகத்தில் தெளிவாக இல்லை.

தமிழர் பல்வகைக் கலைச் செல்வங்களைத் தம்மகத்தே பெற்றிருந்த போதும், அவற்றின் வரலாற்றைப் பேணிப்பாதுகாக்கும் பழக்கமின்மையால், இழந்தவை பல, மறைந்தவை மிகப்பல. ஆரியர் வரவுக்குப்பின் ஏற்பட்ட நாகரிகப் பண்பாட்டுக்கலப்பினால் உண்டான குழப்பங்களும் ஒன்று.. ஆரியர் வரவுக்கு முற்பட்ட காலத்தில்

நாகரிக வளர்ச்சி மிக்க மனித சமுதாயம் விளங்கியதைச் சிந்து வெளி அகழ்வாய்வுகள் உணர்த்துகின்றன. இவற்றால் வேதகாலத்துக்கு முன் இந்தியாவில் வாழ்ந்த மக்களிடையே மருத்துவம் சிறந்து விளங்கியமை தெளிவு. “அதர்வண வேதத்தில் குறிப்பிடப்பெறும் மருத்துவ முறைகள் திராவிட இனத்தாரிடமிருந்து பெறப்பட்டவையே” என்பது வரலாற்றாசிரியர்களின் துணிபு.

சிந்து வெளி நாகரிக காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய தமிழர் மருத்துவ முறை தொடர்ந்து நில்வியமைக்குச் சான்றுகள் உண்டு. சுசுரதர் காலத்தில் இமயமலையில் நடைபெற்ற மருத்துவ மாநாட்டிற்கு வருகை தந்த பன்னாட்டினருள் தென்னாட்டிலிருந்து வந்த அகத்தியரும் ஒருவர் என்று சரக்தசம்ஹிதை குறிப்பிடுவதாக நெடுஞ்செழியன் குறிப்பிடுகின்றார். எனவே ஆயுள் வேதம் தோன்றிய காலத்தில் தென்னாட்டிலும் ஒரு மருத்துவ முறை ஏற்கனவே விளங்கியமை உறுதியாகின்றது.

வேத கால மருத்துவம் தொடக்கத்தில் சிந்துவெளி மருத்துவ முறைகளையும், நம்பிக்கைகளையும் கொண்டிருந்தது என்றும் பின்னர் அறுவகைத் தத்துவங்கள் தோன்றிய காலத்தில் மதத்தினின்று தன்னை விடுவித்துக் கொண்டு, தத்துவமுறைகளோடு இணைந்து கொண்டது. அவ்வாறு ஆயுள்வேதம் தனக்கு அடிப்படையாகக் கொண்ட தத்துவங்களுள் ஒன்றான சாங்கிய தத்துவம் கபிலர் என்னும் தென்னாட்டறிஞரால் தோற்றுவிக்கப்பட்டது என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். அசோகர் காலத்தில் புத்தமதத்தைப் பரப்புவதற்காகத் தென்னாட்டிற்கு வந்த துறவியர் இங்கிருந்த மருத்துவ முறைகளைப் பயின்றதாகவும் அறிகிறோம். சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரையும் உள்ள காலகட்டத்தில் மருத்துவக் கலை தமிழகத்தில் மேன்மையுற்று விளங்கியது எனலாம். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான சங்ககாலத்திலும் தமிழ் மருத்துவம் சிறப்புற்று இருந்தமைக்கு மருத்துவன் தாமோதரனார், மருத்துவன் நல்லசுதனார் என்போரின் கவி எடுத்துக்காட்டாக அமைகின்றது. கடைச்சங்க இறுதியில்

மருத்துவக்கலை பெற்றிருந்த வளர்ச்சியை திருக்குறளின் மருந்து என்ற அதிகாரம் எடுத்து இயம்புகின்றது.

சிலப்பதிகாரம் சங்ககாலத்துக்குச் சற்று பிற்பட்டதாயிருப்பினும் அதன் பாடல்களின் பொருள் சங்ககாலத்தைச் சார்ந்தனவாகவே அமைந்துள்ளன. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பாண்டியர் தம் தலைநகராகிய மதுரை மாநகரில் ஆயுள்வேதம் வாழ்ந்திருந்த செய்தியைக் குறிப்பிடுகின்றார். இதனிலிருந்து சிலப்பதிகாரத்தில் தமிழகத்துக்கு ஆயுள்வேதம் அறிமுகமாயிருப்பது புலனாகின்றது.

"கடைச் சங்க காலத்து இறுதியில் தமிழர் சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டது. போரின் உச்சக் கட்டத்தால் சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குப் பெற்றன. வீட்டின்பம் பெறும் வழியை துறவிகள் மக்கட்குப் போதித்தனர். இக்காலத்தில் உலகியல் சார்ந்த தமிழர்தம் கலைகள் நலிவுற்றன. எனினும் மருத்துவக்கலை போற்றப்பட்டது." என ஆண்டியப்பனும் குமாரசாமியும் கூறுகின்றனர். இக்காலத்தில் சமணரும், பௌத்தரும் மடங்களை நிறுவி மதங்களை போதித்தனர். அவர்கள் ஆற்றிய பொதுத் தொண்டில் ஒன்று மருத்துவமாகும். அவர்கள் காலத்தில் மருத்துவரைப் "பிடகர்" என்றழைக்கும் வழக்கு தோன்றியது என்பர்.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் தமிழகக்கலைகளுக்கு ஆரிய வடிவத்தைக் கற்பிக்கும் முயற்சி தீவிரமாக்கப்பெற்றது. மருத்துவம் வடமொழி கற்ற அந்தணருக்கே உரியதாகப் போற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் சமண, பௌத்த மதங்களை எதிர்த்து வைதீக சமயங்களை வாழ்விக்க நாயன்மார்கள் இயக்கங்களை மேற்கொண்டனர். அவற்றுள் ஞானசம்பந்தருடைய சமய இயக்கம் தமிழ் இயக்கமாக விளங்கியது.

அக்காலத்தில் வடமொழிச்செல்வாக்குப் பெரிதும் நன்கு விளங்கியது. இக்காலத்தில் தமிழர் தம் மருத்துவ நெறியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நிலை உருவானதெனலாம்.

உடலையும் வாழ்க்கையையும் பொய் என்று கூறும் சமண பௌத்த மதங்களின் கொள்கைகளை மறுத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், உடல் பொய் இல்லை. மெய் என்றும் இறைவன் குடி கொள்ளும் கோவில் என்றும், சைவசமயம் ஒரு புறமும் சித்தர் இயக்கமும் மறுபுறமும் மக்களுக்குப் போதித்தன.

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து தமிழர் தம் மருத்துவம் சிந்து நாகரிகத்திலேயே சிறப்புற்று விளங்கியதோடு, தொடர்ந்து தொன்மை அறாது வளர்ந்து வந்தது என்றும் கி.பி மூன்றாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ் சமுதாயத்தில் வடமொழியும், ஆரியரும் செல்வாக்குப் பெற்று தமிழ்க்கலைகளை ஆரிய மயமாக்க முயற்சிகள் மேற்கொண்ட காலத்தில் பிடகர் தம் பொதுக் கொள்கையான மருத்துவத்தினின்று மாறுபட்டு தனித்தன்மையுடைய தமிழர் மருத்துவத்தைப் பேணிக் காக்கும் பொறுப்பைச் சித்தர்களிடம் ஒப்படைத்தனர் எனலாம். இதனை யாழ்ப்பாணத்தில் சைவசமயம் குன்றி, மத மாற்றம் ஏற்பட்ட காலத்தில் எப்படி ஆறுமுக நாவலர் தோன்றிப் பணியாற்றினாரோ அதேபோல் புறச்சமயங்களின் செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில் சித்தர்களும் தோன்றிப் பணியாற்றினார்கள் எனலாம். இக்காலம் தொட்டு தமிழர் தம் மருத்துவத்தைச் சித்த மருத்துவம் எனப் பேசப்படுகின்றது. மெய்கண்ட சாஸ்திரங்கள் சைவசித்தாந்தத்தை நெறிப்படுத்துவன. ஆனால் மெய்கண்ட சாஸ்திரம் உருவாவதற்கு முன் சைவசித்தாந்தம் இல்லையெனக் கூறமுடியாது. இதே போல் பதினெண் சித்தர்கள் சித்த மருத்துவத்தை ஒரு ஒழுங்கு முறையான கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தனர். இதனால் பதினெண் சித்தர்களின் காலத்துக்கு முன் சித்த மருத்துவம் நடைமுறையில் இல்லை என்பது பொருளல்ல. சுருங்கக்கூறின் மெய்கண்டசாஸ்திரங்கள் பதினாங்கும் பதினெண் சித்தர்களும் முறையே சைவசித்தாந்தத்துக்கும், சித்த மருத்துவத்துக்கும் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியவர்கள் எனக் கருத முடியும்.

பதினெண் சித்தர்களின் போகர், புலிப்பாணி, இராமதேவர்

முதலியோரைத் தவிர, மற்றைய சித்தர்கள் தமிழர்களேயாதலால் இச்சித்த வைத்தியம் தமிழ் நாட்டுக்கே உரியது என்பதை மறுக்க முடியாதொன்றென சாம்பசிவம்பிள்ளை அகராதி கூறுகின்றது. அத்துடன் சித்தர் நூல்கள் குறிப்பிடும் பதினெண்மரில் போகர், புலிப்பாணி ஆகியோருக்கு சீனநாட்டுடன் நெருங்கிய தொடர்பு உண்டென்றும் தமிழகத்து இராமதேவர் அராபிய நாட்டுக்குச் சென்று மீண்ட நிலையில் யாகோப்புச் சித்தர் என்று பெயர் பெற்றார் எனவும் அகராதி மேலும் கூறுகின்றது.

சித்தர்கள் தமிழ்மொழியிலேயே இம் மருத்துவத்தை எழுதி வளர்த்தமையாலும், தமிழ் மொழியையே பயன்படுத்தியமையாலும் இவ்வாறு தமிழர் நாகரிகத்தோடு தோன்றி வளர்ந்தமையாலும் தமிழ் நாட்டையே களமாகக் கொண்டு தமிழர்க்கே உரிமையுடைய கலையாக இன்றும் விளங்குவதாலும், இச்சித்த மருத்துவம் தமிழ் மருத்துவம் என்று அழைக்கப்பெற்றது என்பது புலனாகும்.

## 6.4 ஆயுள்வேத மருத்துவத்துக்கும் வேதங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு

வேதகாலங்களில் காணப்படும் மருத்துவம் தொடர்பான குறிப்புகள் அனேகமாக மந்திரம், பேய், பிசாசுகள் பற்றிய நம்பிக்கையும் கலந்த மருத்துவ முறையாகவே காணப்படுமகின்றது. ஆரியர்கள் சிந்து வெளியில் புகுந்த பின்னரே வேதங்கள் எழுதப்பட்டதாகும். வேதங்களில் கூறும் ஆறுகளும், மலைகளும், நிலமும், மரமும் இத்துணைக்கண்டத்தில் உள்ளவையேயன்றி, இந்த ஆரியர்கள் இருப்பிடமெனக் கருதும் மத்திய ஆசியாவில் இல்லை. வேதத்தில் கடை வேதமான அதர்வண வேதத்திலிருந்து ஆயுள்வேதம் தோன்றியதாகக் கூறப்படும் கருத்தினை ஏற்றுக்கொண்டாலும், ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த பின்பே அது எழுதப்பட்டது எனலாம். "ஆயுள்வேதமென்பது அதர்வண வேதத்தின் ஒரு பகுதியல்லவென்பதும், அது கடை வேதமாகிய அதர்வணத்தின் பின்னால் வேதமாகப் போற்றப்பட்டு அதனுடன் சேர்த்து வைக்கப்பட்டது எனவும், இது திராவிட சித்த மருத்துவத்தின்

மொழி பெயர்ப்பேயென்பதுவும் புலப்படுகின்றது" என டாக்டர் சத்தார் உஸ்மான் அலி குறிப்பிடுகின்றார். அத்துடன் சில ஆயிரம் சுலோகங்களைக் கொண்ட அதர்வண வேதம் பல ஆயிரம் சுலோகங்களைக் கொண்ட ஆயுள்வேதத்தை உபவேதமாகக் கொண்டுள்ளது எனக் கூறுவது பொருந்தாததெனவும் கூறுகின்றார். இதனிலிருந்து ஆயுள்வேதத்தை உயர்த்திக்கூறி, அதனை முதன்மைப் படுத்துவதற்காக இப்படி வேதத்துடன் இணைத்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

## 6.5 சித்த ஆயுள் வேத வேறுபாடுகளில் சில

1. சித்த மருத்துவம் கூறும் உயிர்தாது

| | |
|---|---|
| வளி (வாதம்) | - ஆக்கல் தொழில் |
| அழல் (பித்தம்) | - |
| ஐயம் (கபம்) | - அழித்தல் தொழில் |

ஆயுள் வேதம் கூறும் உயிர்த்தாது (முத்தாகு)

| | |
|---|---|
| வாதம் (வளி) | - அழித்தல் தொழில் |
| பித்தம் (அழல்) | - |
| கபம் (ஐயம்) | - ஆக்கல் தொழில் |

மேற்குறிப்பிட்டவற்றில் சித்தமருத்துவ உயிர்த்தாதுவுக்கும் ஆயுள்வேத மருத்துவ உயிர்த்தாதுவுக்கும் நேர் எதிரான கருத்து வேறுபாட்டைக் காணலாம். இது பற்றிய விளக்கத்தை சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்களை விளக்கும் நூல்களில் விரிவாகக் காணலாம்.

2. நோய் கணிப்பு முறைகளில் குறிப்பிடும் நாடித்தேர்வு ஆயுள்வேத மருத்துவத்தில் சிறப்பாகக் காணப்பெறுவதில்லை.

3. சித்த மருத்துவத்தில் காணப்பெறும் காய கற்ப முறைகள் ஆயுள்வேதத்தில் முக்கிய இடம் பெறவில்லை.
4. மருந்து செய்முறையில் தாது (உலோக) வகைகளை

ஆயுள்வேதத்தில் கி.பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னரே உபயோகப்படுத்தினர். ஆனால் சித்த மருத்துவத்தில் தாதுப்பொருட்களை மருந்தாக்கும் முறைகள் மிகச்சிறப்பாக நிலவியது. கட்டு, களங்கு, மெழுகு, சுண்ணம் போன்ற உயர் மருந்துகளை உதாரணமாக்க கொள்ளலாம்.

5. மருந்து தயாரிப்பு முறையில் உள்ள முப்பு, பூநீறு, ஜெயநீர் போன்றவை ஆயுள்வேதத்தில் காணப்படவில்லை.

6. வர்மம், கிரிகை போன்ற நோய்களுக்குரிய மருத்துவ முறைகள் ஆயுள்வேதத்தில் சிறப்பாகக் காணவில்லை.

7. இரசமணி மருத்துவம் எனும் தலை சிறந்த சித்த மருத்துவ முறை ஆயுள்வேத மருத்துவ முறையில் இன்றும் அறியாத ஒன்றாகும்.

சித்த மருத்துவத்தில் நோய் நாடல் முறை இன்னமும் இலகுபடுத்தாமல் இருப்பது நோக்கற்பாலது. பாடல்களில் உள்ள கருத்துக்களை விளங்கக்கூடிய முறையில் எழுதப்படாமலும் தத்துவங்கள் நிறைந்ததாகவும் இருப்பதே இதற்குக் காரணமாகவுள்ளது. ஆனால் ஆயுள்வேத மருத்துவ முறையில் நோய் நிதானமுறை விளங்கக்கூடியதாக எளிமையாக எழுதியிருப்பது போற்றத்தக்கதாகும்.

இவற்றைத்தவிர மருந்து செய்முறையில் சித்த மருத்துவம் உச்சநிலையில் இருப்பதாகவும் குறிப்பிடலாம். அத்துடன் மேலும் சித்த மருத்துவ முறையில் உள்ள அனேக மருந்துகளும் ஆயுள்வேத முறையில் இடம் பெற்று இருப்பதையும் கவனிக்கலாம். சில இடங்களில் இவை சித்த மருந்தா அல்லது ஆயுள்வேத மருந்தா என பிரித்தறிய முடியாத நிலையும் காணப்படுகின்றது.

## 7. ஈழத்தில் சித்த மருத்துவ வளர்ச்சி

ஈழத்தில் சுதேச மருத்துவம் என்று குறிப்பிடும் போது இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழர்கள் வாழும் இடங்களில் சித்த மருத்துவமும், தென்பகுதியில் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர் வாழும் பிரதேசங்களில் ஆயுள்வேத மருத்துவமும் பரவியிருந்தது என முன்னர் குறிப்பிட்டோம். ஆனால் யாழ்ப்பாணத்தில் மரபு வைத்தியமாகச் சித்த மருத்துவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த சரிதமும் உண்டு. பெரும்பான்மையான மக்களின் கலை, கலாச்சாரம், மருத்துவத்துக்கு முதலிடம் கொடுத்து வந்த அரசுகள் ஆட்சியில் வந்தமையால் சிறுபான்மை மக்களின் சித்த மருத்துவம் நலிவுற்று சித்த ஆயுள்வேத மருத்துவம் என்று ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்று விட்டது எனலாம். ஆனால் இந்தியாவில் சித்த மருத்துவமும் ஆயுள்வேத மருத்துவமும் தனித்தனிப்பிரிவாக வளர்ச்சியடைந்தது போல் ஈழத்தில் வளர்ச்சியடையவில்லை எனக்கூற முடிகின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப்பகுதியில் உள்ள அரசு சார்ந்த நிறுவனங்களில் சித்த மருத்துவமும் வளர்ச்சியடையிவில்லையென்றே கூறலாம். ஆனால் வடக்கு, கிழக்குப் பகுதியிலுள்ள பரம்பரைச் சித்த வைத்தியர்கள் ஓர் அளவு சித்த மருத்துவத்தைப் பேணிபாதுகாத்து வருகின்றனர். எனினும் வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள சில விசேட சித்த மருந்து முறைகள் அருகிக் கொண்ட போவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்குக் காரணம் என்னவெனில் ஆயுள்வேத மருத்துவத்தில் ஒரு பிரிவு சித்த மருத்துவம் என்று கூறக்கூடிய முறையில் நிர்வாகக் கட்டமைப்பு அமைந்திருப்பதோடு அரச மருந்தகங்களில் சித்த மருந்து தயாரிக்காமல் விடுவதும், சித்த மருந்துகளை மருந்தகங்களுக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் விடுவதுமே காரணம் எனலாம். இதனால் தமிழ் சமூகத்தில் சித்த ஆயுள்வேதமென்ற சொல்லைப் பயன்படுத்தி வருவதும் வழக்கமாகிவிட்டது.

இனி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மருத்துவ வரலாறு பற்றி நோக்கினால் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்கள் என அழைக்கப்பட்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் காலம் (1216 - 1621) கி.பி 13ம் நூற்றாண்டில் இருந்து கி.பி 19ம் நூற்றாண்டின் முதற்பகுதி வரை உள்ள காலத்தையே யாழ்ப்பாண இராச்சியம் என்று வரலாற்றுத்துறையினர் குறிப்பிடுகின்றனர்.

யாழ்ப்பாண அரசர்களிற் சிலர் தமிழ்ப்புலமை உடையோராகவும் விளங்கியுள்ளனர். தமிழ்மொழி, இலக்கியம், சைவம், வைத்தியம், சோதிடம் முதலானவற்றின் வளர்ச்சிக்கு யாழ்ப்பாண மன்னர்கள் உறுதுணையாக இருந்து வந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே குருநாகல் பகுதியைச் சேர்ந்த தம்பதேனியாவில் அரசாண்ட நான்காம் பராக்கிரமபாகுவினுடைய அரச சபையில் கி.பி 1310ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட "சரசோதிமாலை" என்னும் சோதிட நூலே காலத்தால் முந்திய தமிழ் நூல் எனக் கலாநிதி சிவலிங்கராஜா கூறியுள்ளார்.

வட இலங்கையில் யாழ்ப்பாண இராச்சியம் நிலவிய காலகட்டத்தில் ஈழத்தில் பல பாகங்களிலும் தமிழ் மக்கள் பரந்து வாழ்ந்துள்ளனர் என்பதைத் தம்பதேனியாவில் எழுந்த தமிழ் நூலான சரசோதிமாலை தெளிவுபடுத்துகின்றது.

சரசோதிமாலையை எழுதியவர் தேனுவரை பெருமாள் என்னும் போசராச பண்டிதர் ஆவார். இவர் பிராமண குலத்தைச் சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது என்கின்றனர்.

மன்னர்கள் காலத்தில் உருவான நூல்களுக்கு அம்மன்னர்களின் பெயரைச் சூட்டி வைப்பது ஒரு மரபாக வந்துள்ளது. இதற்கமைய ஏறத்தாழ சரசோதிமாலை என்னும் சோதிட நூல் எழுந்த காலப்பகுதியிலேயே யாழ்ப்பாணத்தை ஆண்ட செகராசசேகரன் என்னும் மன்னனின் ஆணையின் பேரில் ஆக்கம்

பெற்றதே "செகராசசேகரமாலை" என்னும் சோதிட நூலாகும். இந்நூலை இயற்றியவர் சோமன் என்னும் அந்தணப் புலவர் என்று தாவரவியல் அறிஞர் சிவகடாட்சம் குறிப்பிடுகின்றார்.

பரராசசேகரம், செகராசசேகரம் என்னும் வைத்தியநூல்களும், செகராசசேகரமாலை என்னும் சோதிடநூலும் யாழ்ப்பாண மன்னர்கள் காலத்துக்கு உரியனவையாகக் கொள்ளப்படுகின்றன.

அக்காலத்து அரசவையில் வைத்தியர்கள், சோதிடர்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். இவர்கள் அரசசபை ஆலோசகர்களாகச் செயல்ப்பட்டமையைத் தமிழ் இலக்கியங்களில் காணக்கூடியதாகவுள்ளன. ஈழத்தில் பத்தொன்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களில் பலர் வைத்தியம், சோதிடம் முதலான துறைகளில் விற்பனர்களாக விளங்கியதை அவர்களது வரலாறு தெளிவுபடுத்துகின்றது. இரகுவம்சத்துக்கு உரையும், தொல்காப்பியத்துக்கு உரை விளக்கக் குறிப்பும் எழுதிய மரபுவழித் தமிழ் அறிஞரான வித்வசிரோன்மணி சி.கணேசையர் சோதிடக்கலையில் விற்பன்னராக விளங்கியமையும், முத்துக்குமாரசாமிக் குருக்கள் தமிழிலும், வடமொழியிலும் சிறந்த புலமையாளராக விளங்கியதோடு, வைத்தியத்திலும் சோதிடத்திலும் விற்பன்னராக விளங்கியமையும் ஈழத்தில் தமிழ்ப்புலமையும் வைத்திய, சோதிடக்கலைகளும் ஒன்றிணைந்து வளர்ந்து வந்துள்ளமையைப் புலப்படுத்தும்.

வைத்தியமும் சோதிடமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகப் பயன்படுத்தப்பட்டமைக்குச் சான்றுகள் உள. இன்றும் மரபு வழி வைத்தியர்கள் நோயாளியின் கிரக நிலையைக் கேட்டறிந்த பின்னரே வைத்தியம் செய்யத் தொடங்குவதையும் மருந்து சாப்பிடுவதற்கு நாள், நட்சத்திரம், திதி முதலானவற்றைப் பார்ப்பதையும் காணமுடிகின்றது. நாட்டின் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு மழை, வெயில், காற்று முதலான

இயற்கைக் கால நிலைகளைக் கணித்து அறிவதற்குச் சோதிடக்கலையைப் பயன்படுத்துவதனையும் அறிய முடிகிறது. அரச கருமங்களைத் தொடங்குவதற்கு நாள், நட்சத்திரம், நிமித்தம் முதலானவற்றைப் பார்ப்பதற்கும் சோதிடக்கலை அனுசரணையாகவிருந்தது. செகராசசேகரமாலை என்னும் சோதிட நூலுக்கு கொக்குவில் இ. சி. இரகுநாதையர் சிறப்பானதோர் உரை எழுதியுள்ளார்.

கி.பி. 14 ஆம் நுற்றாண்டின் நடுப்பகுதியில் செகராசசேகரன் என்னும் அரியணைப் பெயருடன் சிங்கையாரியன்என்னும் அரசன் காலத்தில் தொகுத்து வெளிவந்த தமிழ் மருத்துவ நூலொன்றின் சிறுபகுதியே செகராசசேகரம் என்னும் வைத்திய நூல் என்றும் மீதி ஏட்டுச் சுவடிகளாகவே இருந்ததென்றும் அப்பகுதி நூல்வடிவம் பெறவில்லையென்றும் தாவரவியல் அறிஞர் சிவகடாட்சம் கூறுகின்றார்.

செகராசசேகர மன்னன் வாகடம் பயின்றவனென்றும், மருத்துவக் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றவன் என்பதும் இந் நூலிலுள்ள பாடல் ஒன்று மூலம் தெளிவாகின்றது. இம்மன்னன் போர்க்களத்தில் இறந்துபோன எதிரிகளின் உடல்களைக் கீறி மனித உடலமைப்புப் பற்றி ஆராய்ந்து கண்டறிந்தான் என்ற செய்தி மருத்துவக்கலையில் மன்னனின் பெரும் அக்கறையினை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

செகராசசேகரம் ஏட்டுப் பிரதியில் காணப்படும் பாடல்களுள் மன்னன் புகழ் கூறும் பாடல்கள் தவிர்ந்த ஏனையவற்றுக்குள் பெரும்பாலானவற்றை இன்று அகத்தியர் 2000 என்னும் பெயரில் காணப்படும் நூலிலும் காணமுடியும் என்கின்றனர்.

## பரராசசேகரம்

ஈழத்தில் வெளிவந்த இன்னுமொரு தமிழ் மருத்துவ நூல் பரராசசேகரம் ஆகும். இது பன்னிரண்டு பாகங்களை உள்ளடக்கிய பெரிய நூலாகும். ஆனால் அச்சு வாகனம் ஏறி நூல் வடிவில் ஏழு பாகங்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. இதனை வெளியிட்ட பெருமை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஐ. பொன்னையா என்பவருக்கே சேரும்.

வெளிவந்த பரராசசேகர நூல்கள்

| | |
|---|---|
| முதல் பாகம் | - சிரரோகம் |
| இரண்டாம் பாகம் | - கெர்ப்பரோக நிதானம், பாலரோக நிதானம் |
| மூன்றாம் பாகம் | - சுரம், சன்னி, விக்கல், சத்திரோக நிதானங்கள் |
| நான்காம் பாகம் | - வாத பித்த சிலேற்பன ரோக நிதானங்கள். |
| ஐந்தாம் பாகம் | - மேகம், பிளவை, பவுந்திரம், கைக்குழித்தாமரை ரோக நிதானங்கள், வன்மவிதி, சத்திரவிதி, சிரைவிதி, இரட்சை விதி, அனுபந்தத்துடன் |
| ஆறாம் பாகம் | - உதர ரோகம், குன்மம், பாண்டு, காமாலை, சோகை, வாய்வு சூலை, ரோகங்கள் |
| ஏழாம் பாகம் | - மூலம், அதிசாரம், கிரகணி கரப்பன், கிரந்தி, குட்டரோகநிதானம். |

இந்நூலைத் தென் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த பன்னிரண்டு மருத்துவர்கள் எழுதியதாகக் கூறப்படுகின்றது. பொதுவாக யாழ்ப்பாண மன்னர்கள் தமிழகத்திலிருந்து தமிழ்ப்புலவர்கள் பலரை வரவழைத்து ஈழத்தின் பல பாகங்களில் குடியமர்த்தி தமிழ் இலக்கியம், தமிழ்க் கல்வி முதலியவற்றுக்கு தொண்டு புரிந்துள்ளனர் என்று அறிஞர் நடராசா குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாண மன்னர்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியான திருகோணமலையில் குடியமர்த்திய தமிழ்ப்புலவர்கள் பலர் சிறந்த இலக்கியங்களை இயற்றித் தமிழ் மொழியை வளம்படுத்தினர் என்று பேராசிரியர் ஆ. சதாசிவம் கூறுகின்றார். பரராசசேகரம் ஆக்கப் பெற்ற காலத்தைச் சரியாகக் குறிப்பிட முடியவில்லை. பரராசசேகரன் என்னும் பெயருடன் வட இலங்கையை ஆண்ட மன்னர்கள் பலராக இருப்பதே இதற்குக் காரணமாகும். மேலும் இந்நூலில் அரசன் பற்றி எந்தக் குறிப்பும் காண முடியவில்லை.

பரராசசேகரத்தில் கூறப்படும் மருந்துகள் சிலவற்றை நோக்குமிடத்து இந் நூலினை எவ்விதத்திலும் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் இந் நூலில் கூறப்படும் பறங்கிப்பட்டை என்னும் மூலிகை தமிழ் மருத்துவர்களால் மேக வியாதிக்கு (Venereal Disease) மருந்தாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். சீனவேர் அல்லது சீனப்பாகு என்பதே இம்மூலிகையின் பழந்தமிழ்ப் பெயராகும்.

கி.பி. 1540 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் சீனவேர் (China root) பற்றி முதன் முதலாக அறிந்து கொண்டனர். அக்காலப்பகுதியில் கோவாவில் போர்த்துக்கேய அதிகாரியாகவிருந்த மாட்டின் அபொன்ஸோ டி சூலா (Martin Aponzo. D. Sooza) என்பவர் ஸிபிலிஸ் (Syphilis) எனப்படும் பறங்கிநோய்க்குச் சீனவேர் நல்லதொரு மருந்தாகும் என்ற விபரத்தைச் சில சீன வர்த்தகர்கள் சிலர் மூலம் அறிந்து கொண்டார்.

இதன் பின்னரே இம் மூலிகைக்கு பறங்கியர் (போர்த்துக்கேயர்) மத்தியில் அறிமுகம் அடைந்தது. போர்த்துக்கேயரால் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்ட நோயே பறங்கிநோய் எனப் பெயர் பெற்றது. ஆகையால் போர்த்துக்கேயரின் வருகைக்குப் பின்னரே பறங்கிப்பட்டை என்ற பெயர் இடம்பெற்றது எனலாம். இந்நூலில் பறங்கிப்பட்டைச் சூரணம் என்ற பெயருடைய ஒரு மருந்தையும் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றைக் கொண்டு

கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ அதன் பின்னரோ எழுதப்பட்டது என ஊகிக்கலாம்.

கி.பி. 1505 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் தமது செல்வாக்கைப் பதிக்கத் தொடங்கிய போர்த்துக்கேயர் கி.பி. 1621 இல் யாழ்ப்பாண இராச்சியத்தைத் தமது பூரண கட்டுப்பட்டுக்குள் கொண்டு வந்தனர். கி.பி. 1658 இல் தமது ஆதிக்கத்தை ஒல்லாந்தரிடம் இழக்கும் வரை இவர்களது ஆட்சி நடைபெற்றது. இந்நிலையில் கி.பி. 1540 க்கும் 1621 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பரராசசேகரன் என்னும் பெயருடன் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னன் ஒருவனே பரராசசேகரம் தோன்றக் காரணமாகவிருந்தான் எனக்கருத முடியும். பரராசசேகரன் என்னும் அரியணைப் பெயருடன் யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆண்ட மன்னன் (எதிர்மன்னசிங்கன்) காலத்தில் பல இலக்கிய நூல்கள் தோன்ற முயற்சிகள் எடுத்தமைக்குச் சான்றுகள் உண்டு. இப் பரராசசேகரின் காலம் கி.பி. 1591 - 1616 வரையாகும். இவற்றைவிட பரராசசேகரின் மகன் பரநிருபசிங்கன் சிறந்த மருத்துவனாக விளங்கினான் என்றும் கண்டியரசனின் மனைவிக்கு ஏற்பட்ட கடும் நோயினை ஒரே மருந்தினால் குணப்படுத்தினான் என்றும் மற்றுமோர் வரலாற்றுக் குறிப்பு உண்டு என்கிறார் பா.சிவகடாட்சம். ஆகையால் மேற்கூறப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு கி.பி 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூல் எழுதப் பெற்றிருக்கலாமென்ற முடிவுக்கு வரலாம்.

இந்நூலைத் தென் இந்தியாவிலிருந்து வந்த மருத்துவர்கள் எழுதினார்கள் என்னும் கூற்றை முன்னர் அறிந்தோம். ஆனால் இம் மருத்துவ நூல்களில் உள்ள மூலிகைகளின் பெயர்கள் யாழ்ப்பாணத்துக்னெ உள்ள பெயர்களிலேயே கையாண்டிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக தென்இந்தியாவிலே வழங்கப்படும் சுக்கு என்னும் மூலிகைக்கு யாழ்ப்பாணத்தில் வேர்க் கொம்பு என வழங்கும் சொல்லே எடுத்தாளப்பட்டுள்ளது. இதே போல் தென் இந்தியாவில் குறிப்பிடப்படும் பூண்டுக்கு, உள்ளியென இங்கு (வெள் உள்ளி அல்லது வெள்ளை வெங்காயம்) எடுத்தாளப் பெற்றுள்ளது.

தமிழகத்தில் உள்ள கடைகளில் “உள்ளி” தரும்படி கேட்டால் ஈரவெங்காயத்தையே தருவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து யாழ்ப்பாண நடைமுறைகளின் படி இந்நூல் எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்துக்கென குறிப்பிடக்கூடிய பல விசேட மருந்துகள் இன்றும் தென் இந்தியாவில் நடைமுறையில் இல்லையென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

சில மருந்துகள் எடுத்துக்காட்டாக இங்கு தரப்பட்டுள்ளன. அவையாவன

1. சொக்கநாத வயிரவன்
2. வல்லார்க்கு வல்லான்
3. மிண்டார்க்கு மிண்டான்
4. இரத்தின பூபதி மாத்திரை
5. சந்திர காந்தச் சூரணம்
6. பலவாயுக்குளிகை
7. பெருங்கிரந்தியெண்ணெய்
8. உள்ளியாமணக்கெண்ணெய்
9. உள்ளிப்பாகு (வெள்ளை வெங்காயம்)
10. செம்பரத்தம் பூ எண்ணெய்

மேற்குறிப்பிட்ட மருந்துகள் யாவும் யாழ்ப்பாண சித்த மருந்துவர்களால் இன்றும் உபயோகத்தில் உள்ளது.

இதனால் இவற்றினைத் தென் இந்தியாவிலிருந்து வந்த மருத்துவர்கள் எழுதினார்கள் என்பது ஆய்வுக்குரியது. ஏனெனில் யாழ்ப்பாண நடைமுறையில் மூலிகைகளின் பெயர்கள், விசேட மருந்துகள் ஆகியனவற்றை உடனடியாக அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஆகையால் இவர்கள் யாழ்ப்பாண மருத்துவர்களுடன் சேர்ந்து எல்லாவற்றையும் அறிந்த பின்பே, இதனை எழுதியிருக்க வேண்டும் எனக்கூறுதல் பொருத்தமாகும்.

தன்வந்திரி பெயரில் வழங்கப்பெறும் வடமொழி வைத்திய சிந்தாமணியைப் பெரிதும் தழுவியே தாம் இந்நூலினை ஆக்கியுள்ளதாகப் பரராசசேகர நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதுவும் ஆய்வுக்குரியதாகும்

## சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள்

இரண்டாம் பராக்கிரமபாகு (கி.பி 1267) ஆட்சிக்காலத்தில் "யோகர் நவ", "பிரயோக ரத்னா வலிய" என்னும் இரு மருத்துவ நூல்கள் சிங்கள மொழியில் எழுந்தன.

ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் (கி.பி 1410 -1467) வைத்திய சிந்தாமணி என்னும் தமிழ் மருத்துவ நூல் "வைத்திய சிந்தாமணி - பைஸாஜ்ஜிய சங்கரஹு" என்னும் பெயரில் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டதாக அறிஞர் சிவகடாட்சம் கூறுகின்றார். இந்நூலினைச் சிங்கள மொழியில் எழுதியவர் சந்திரசேகர பண்டிதரின் மாணாக்கரெனப்படும் "சேலசிங்கம்" என்னும் தமிழ் பண்டிதராவார் எனவும் குறிப்பிகின்றார். பொட்டணி, கைப்பு, சிந்தூரம், நெல்லி, திற்பலி, சாதிலிங்கம், நீர்முள்ளி, மஞ்சாடி, பத்தியம், சரக்கு, பல்மாணிக்கம், இலவங்கம், கறுவா, பெருங்காயம், களிப்பாக்கு போன்ற பல தமிழ்ப் பெயர்கள் இந்நூலில் இடம் பெறுவதைக் காணலாம்.

இனி, ஈழத்தில் ஒல்லாந்தர் காலம் பற்றிக் கவனிப்போம். ஒல்லாந்தர் காலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கி.பி 1638ஆம் ஆண்டில் மட்டக்களப்பையும், 1639ஆம் ஆண்டு திருகோணமலையையும் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1658 இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர். கண்டி இராச்சியம் தவிர்ந்த ஈழத்தின் பல பகுதிகளில் 138 ஆண்டுகள் ஒல்லாந்தரின் ஆட்சி நடைபெற்றது.

போத்துக்கேயரின் ஆட்சியுடன் ஒப்பிடும் போது ஒல்லாந்தரின் ஆட்சி பல்வேறு வகைகளில் நெகிழ்ச்சித்தன்மை கொண்டதாக

இருந்ததெனலாம். இவர்கள் காலத்திலேயே தேசவழமை என்னும் சட்டமுறை நடைமுறைப்படுத்தியதென அறிகிறோம்.

ஒல்லாந்தர் காலப்பகுதியிலே தோன்றிய வைத்திய சோதிட நூல்களில் இன்று எமக்குக்கிடைப்பவை வரத பண்டிதரின் **அமுதாகாரம்** என்னும் வைத்திய நூலும், இராமலிங்க முனிவரின் **சந்தானதீபிகை** என்னும் சோதிட நூலுமேயாகும். வேறு நூல்கள் தோன்றியிருந்தாலும் அவை அச்சேறாது காலப் போக்கில் அழிந்திருக்கக் கூடும் என்று கலாநிதி சிவலிங்கராஜா குறிப்பிடுகின்றார்.

## அமுதாகாரம்

ஈழத்து வைத்திய நூல்களின் வரிசையில் அமுதாகாரத்துக்கு குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் உண்டு. "விஷகடி" வைத்தியம் பற்றிக்கூறும் இந்நூல் நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் நிலவி வந்த விஷகடி வைத்திய மரபினை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வைத்திய, சோதிடம் வாகட அறிவிலும் வரத பண்டிதர் வல்லவர் என்று அமுதாகரப் பாயிரச் செய்யுள் மூலம் அறிய முடிகிறது. அப்பாயிரப் பகுதி பின்வருமாறு

"இயலிசை நாடகம் இசை பெறும் சோதிடம்
பயில்தரு வாகடம் படித்தினி துணர்ந்தோன்"

வைத்தியம், சோதிடம் முதலியவற்றிலே பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றவர்கள் பலர் தமிழ்ப்புலமையாளராகவும் விளங்கியமை ஈழத்து இலக்கிய வரலாற்றில் தெளிவாகக் காணலாம். இந்த மரபின் ஒல்லாந்தர் காலப்பிரதிநிதியாக வரத பண்டிதரைக் கொள்ளலாம்.

தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையையும் வைத்திய சோதிட அறிவும் அனுபவமும் மூன்று தலைமுறைகளாகத் தொடர்ந்து வந்த குடும்பத்திலே வரத பண்டிதர் தோன்றியுள்ளார் என்பதை இந்நூலில் உள்ள மற்றும் செய்யுளில் காண முடிகிறது.

மேலும் இவர் பற்றி சிவகடாட்சம் குறிப்பிடுகையில் இவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர் என்றும் (18ம் நூற்றாண்டு) இந்நூல் விஷவைத்தியம் பற்றியதாயும் சித்தாருடம் என்னும் பழந்தமிழ் நூலில் கூறப்பட்டுள்ளவற்றைத் தாம் மீண்டும் கூறாது புதிய மருந்துகள் சில பற்றிக் கூறுவதாகவும், இந்நூல் திருகோணமலையைச் சேர்ந்த சு.தம்பையா என்பவர் கி.பி 1852ம் ஆண்டு பதிப்பித்துள்ளார் என்றும் உள்ளது. இக்கூற்றிலிருந்து இந்நூலுக்கு முன் சித்தாருடம் எனும் பழம் தமிழ்நூல் ஒன்று இருந்ததாகத் தெரிய வருகின்றது.

## சந்தான தீபிகை

ஒல்லாந்தர் காலப்பகுதியில் அராலியைச்சேர்ந்த ச.இராமலிங்க முனிவர் சந்தான தீபிகை யென்னும் சோதிட நூலை எழுதியுள்ளார். இந்நூல் வடமொழிச் சந்தான தீபிகையின் மொழிபெயர்ப்பாகும். சந்தான விருத்திக்குரிய கிரகநிலைகளைக் கூறும் இந்நூல் 122 விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. இன்று கிடைத்தற்கரியதாகிய இந்நூலின் சில பாடல்களைப் பேராசிரியர் ஆ.சதாசிவம் தொகுத்த **ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியத்தில்** காணலாம்.

மேலும் ஈழத்தில் ஆங்கிலேயர் காலம் பற்றிக் கவனித்தால் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் கி.பி 1796 தொடக்கம் 1947 வரை இலங்கையை ஆட்சி செய்தனர். 1815 இல் கண்டி இராட்சியத்தைக் கைப்பற்றியதோடு இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தனர். 19ம் நூற்றாண்டு ஆரம்பமாவதற்குச் சற்று முன்னதாகத் தொடங்கிய

ஆங்கிலேயர் ஆட்சி இருபதாம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை நீடித்தது. ஏறத்தாள 150 ஆண்டுகள் ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்தனர்.

இக்காலத்தில் இருபாலைச் செட்டியார் என்பவர் "வைத்திய விளக்கம்" என்னும் நூலை எழுதியுள்ளார். அவர் இயற்றிய வைத்திய விளக்கம் என்னும் நூலுக்கு **அமிர்தசாகரம், பதார்த்த சூடாமணி** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மாவிட்டபுரத்தில் கி.பி 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சொக்கநாதர் என்பவர் **சொக்கநாதர் தன்வந்திரியம்** என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூலினை ஏழாலை ஐ.பொன்னையா என்பவர் 1933ம் ஆண்டு பதிப்பித்துள்ளார்.

இந்நூலை வடக்கு, கிழக்கு மாகாணசபை சுதேச மருத்துவப் பணிப்பாளராக முதன்முதல் பதவி ஏற்ற சுதுமலை பாரம்பரிய சித்த வைத்தியக்கலாநிதி பசுபதி உரோமகேஸ்வரன் அவர்கள் தமது காலத்தில் இந்த நூலோடு செகராசசேகர வைத்தியம், அமிர்தாசாகரம் பதார்த்த சூடாமணி எனும் இரு அரும் பெரும் நூல்களைச் சேகரித்து மீள் பதிப்புச்செய்ய நடவடிக்கைகள் எடுத்தார். இப்பெரும் முயற்சி அண்மையில் பேராசிரியர் சு.பவானி அவர்களின் காலத்தில் நிறைவு செய்யப்பட்டது மனம் கொள்ளத்தக்கது.

இலங்கையில் வழங்கும் தமிழ் வாகட நூல்களை ஒன்றாகக் கூட்டி பல வருடங்களாக முயற்சியெடுத்து நிறைவேறிய **சுதேச வைத்திய அவுடதத் திரட்டு** என்னும் சிறந்த நூலை செய்யுள் வடிவில் அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையில் 1932ஆம் ஆண்டு அச்சேற்றப்பட்டது. இந்நூலினை உருவாக்க வசாவிளான் த.ச.தம்பிமுத்து வைத்தியர், சுன்னாகம் ஐ.பொன்னையா பண்டிதர் ஆகியோர் எடுத்த பெரும் முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

திருகோணமலையைச் சேர்ந்த ப.சின்னத்தம்பி வைத்தியர் அங்காதிபாதம் என்னும் நூலினை 1906ஆம் ஆண்டு இயற்றியுள்ளார் என்றும், ஆனால் அது அச்சேறவில்லையென்றும் குறிப்புகள் உள.

எமது நாட்டுக்கு வந்த அமெரிக்கன் மிஷனரிமார்கள் சமயத்தைப் பரப்ப வந்திருந்தாலும் அறிவியல் சார்ந்த ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பு செய்வதற்கெடுத்த பெரும் முயற்சிகளை நாம் பாராட்டவேண்டும். இது பற்றி முன்னரும் குறிப்பிட்டிருந்தோம். இவ்வகையில் மானிப்பாயிலே மருத்துவப்பணியில் ஈடுபட்ட அமெரிக்கன் மிஷனரியைச் சேர்ந்த டாக்டர் கிறின் (Dr.Green) அவர்களும், அவரது உதவியாளர்களும், மாணவர்களும் இணைந்து இப்பாரிய பணியை நிறைவேற்றினர்.

அவையாவன,

| | | |
|---|---|---|
| இரண வைத்தியம் | - | 1867ஆம் ஆண்டு |
| மனுஷ அங்காதிபாதம் | - | 1872ஆம் ஆண்டு |
| வைத்தியாகரம் | - | 1872ஆம் ஆண்டு |
| மனுஷ கரணம் | - | 1872ஆம் ஆண்டு |
| கெமிஸ்தம் | - | 1875ஆம் ஆண்டு |
| மனுஷ சுகரணம் | - | 1883ஆம் ஆண்டு |
| இந்து பதார்த்த சாரம் | - | 1884ஆம் ஆண்டு |

முதலியவை இக்காலத்தெழுந்த விஞ்ஞானத் துறைசார் நூல்கள் எனவும் கலாநிதி சிவலிங்கராஜா குறிப்பிடுகிறார்.

மருத்துவம் சார்ந்த பத்திரிகை ஒன்றும் 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்ததாகவும் அதற்கு வைத்திய விசாரணி என்ற பெயர் சூட்டப்பட்டது என்பர். வைத்திய விசாரணி சஞ்சிகை 1898 ஆம் ஆண்டு ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் திங்கள் வெளியீடாக வெளிவந்தது. இதன் ஆசிரியர் மானிப்பாயைச் சேர்ந்தவரென்றும் பதிவு செய்யப்பட்ட மேலைநாட்டு மருத்துவர் என்றும் குறிப்புகள் உள.

அத்துடன் இவர் இறந்தவர்களை எரிப்பதில் உள்ள சுகாதாரச் சிறப்பு, புதைப்பதில் உள்ள கேடு, கன்மக் கொள்கை, விபத்துக்கள் போன்றவற்றை பற்றி எழுதியுள்ளார் என "யாழ்ப்பாணச் சரிதம்" என்னும் நூலில் காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவம் வகிக்கும் நிலையை அறிந்து கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் உள்ள சித்த மருத்துவர்கள் அனேகர் ஆன்மீகவாதிகளாகவும், இறைபக்தியுடையவர்களாகவும், சைவசித்தாந்திகளாகவும் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. அத்துடன் அவர்கள் மருத்துவத்தைத் தங்களின் வாழ்வுநெறியாக அமைத்துக்கொண்டனர் எனவும் கூறலாம். இதனாலேயே யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவப் பரம்பரை தொடர்கின்றது.


இலங்கையில் சுதேச மருத்துவ வளர்ச்சியில் யாழ்ப்பாணம் முக்கிய பங்கு பெறுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக இலங்கையில் முதன் முதலாக யாழ்ப்பாணத்திலேயே சுதேச மருத்துவம் போதிப்பதற்கு ஒரு கல்லூரி நிறுவப்பட்டது. இதனை அமரர் பஸ்தியாம்பிள்ளை அவர்கள் "இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி" என்ற பெயருடன் 1924ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். இதன் பின்னரே அரசாங்கத்தினால் 1929ஆம் ஆண்டு கொழும்பில் ஒரு சுதேச மருத்துவக்கல்லூரி நிறுவப்பட்டது. இக்கல்லூரியை ஆரம்பிப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் அமரர் கௌரவ பாலசிங்கம் அவர்கள் ஆவார். இக்கல்லூரியில் ஆயுள்வேதம், சித்த, யூனானி ஆகிய மூன்று பிரிவுகளும் இயங்கி வந்தன. இக்கல்லூரி நாளடைவில் வளர்ந்து வந்து உயர் கல்வி அமைச்சின் பரிந்துரையால் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு தரமுயர்த்தப் பெற்றது. ஆனால் இலங்கையில் ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களால் (இனக்கலவரம்) பாதிப்படைந்து 1983ஆம் ஆண்டு கொழும்பிலிருந்த சித்த மருத்துவப்பிரிவு யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்று தற்போது கைதடி என்னும் ஊரில் "சித்த மருத்துவத் துறையாக" வளர்ந்து

வருகின்றது. அங்கு படித்து வெளியேறும் பட்டதாரி மாணவர்களுக்கு B.S.M.S என்ற பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது. ஆனால் பட்டமேற்படிப்பு எம்.டி கல்வியினைப் பெறுவதற்கு அங்குள்ள பட்டதாரிகள் தமிழகத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள விரிவுரையாளர்களில் அனேகமானோர் பட்டமேற்படிப்பை தமிழகத்தில் பெற்று அங்கு பணியாற்றுகின்றார்கள் என்பதை பெருமையுடன் குறிப்பிடலாம். பரம்பரை வைத்திய சமூகம் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சித்த மருத்துவ வளர்ச்சியில் முக்கிய பங்கு கொள்கின்றன என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஆனால் யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள பரம்பரை வைத்திய சமூகம் அண்மையில் நடைபெற்ற புலம் பெயர்வால் இருப்பிடம் மாறி வெளிநாடுகளிலும் வசித்து வருவதால் வைத்திய பரம்பரை அருகிக்கொண்டு போவதைக் கவனிக்கக்கூடியதாகவுள்ளது. பாதிக்கப்படாத சில வைத்திய பரம்பரைகள் யாழ்ப்பாணத்தில் தங்கள் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

## தொகுப்புரை

இந்நூலில் சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. ஆதிமனிதன் எவ்வாறு மருத்துவ அறிவு பெற்றான் என்றும், காலம் செல்லச் செல்ல மருத்துவ வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்றும் விளக்கப்பட்டுள்ளன. **"தமிழர் மருத்துவமே சித்தமருத்துவம்"** எனத் தெளிவுபடுத்துவதற்காக பண்டைய நாகரிகங்கள், குமரிக்கண்டம், சிந்துவெளிநாகரிகம், திராவிடர், ஆரியர் ஆகியன பற்றி ஆராயப்பட்டுள்ளன.

பழந்திராவிட மருத்துவத்திலிருந்தே ஆயுள்வேத மருத்துவமும் சித்தமருத்துவமும் வளர்ந்து வந்துள்ளன என்பதை இவ்ஆய்வு புலப்படுத்தும்.




உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளத்தேன் உயிரை வளர்த்தேனே

\- திருமந்திரம் -

Dr.P.Ramanathan
D.A.M.S.(Cey.),M.D.(India),Ph.D.(S.L.)
Paramu Siddha Medical Centre
Thavady Suthumalai Road, Thavady, Kokuvil.

# ஆதி மனிதன்



ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் – ஸ்ரேசன் றோட் கொக்குவில். T.P:4590244.